Every lecturer used to say that we were the first batch of students to be sent up for the University Examination and that it is on our performance in the Examination that the good name of the college would depend. So everyone of the lecturers used to exhort us to spend all our spare time in studies, so that we may pass our examination and bring a high percentage of passes for the college. I was always proud to be in the first batch of students of this college. I hope we would not disappoint the high hopes of our Lecturers and our college authorities.

A. SUNDARARAJAN,

II U.C.

MY EPITAPH

HERE lies a man
Who chose to be uncommon;
Who sought opportunity—
    Not security;
Who loathed to be kept a citizen;
Who always strove
    To take a calculated risk;
    To dream and to build;
    To fail and to succeed;
Who preferred life's challenges
    To a guaranteed existence;
Who enjoyed the benefits
    Of His creations;
Who faced the world boldly
    To report to the Master at the end,
    " My Lord, I've done this ".

J. VENKATARAMAN,
I. U. C.

ACTIVITIES OF THE DIFFERENT ASSOCIATIONS IN THE NEW COLLEGE, DURING 1952—53.

DATE	NAME OF ASSOCIATION	LECTURER	SUBJECT	CHAIRMAN
2nd Sep. '52	UNION INAUGURAL	Mr. Mac Alister	STUDENTS' LIFE IN U.S.A.	Mr. A. K. A. Abdus Samad.
6th Oct. '52	UNION	Sri. S. Manickam, M.A., B.T.	GEO-POLITICS	Mr. *Mirza* Abdul Majid, M.A., LL.B.
7th Oct. '52	MATHEMATICS	Sri. T. N. Seshadri, M.A.,	SCIENTIFIC OUTLOOK	Mr. Syed Abdul Jabbar.
9th Oct. '52	TAMIL	*Vidwan* T. P. *Meenakshi*-Sundaram Pillai, M.A., B.L.	ARAVURAI	Dewan Bahadur T. M. Narayana-swamy Pillai M.A., B.L.
16th Oct. '52	COMMERCE	Mr. M. Velayudham, M.A.,	EDUCATION FOR COMMERCE	Mr. M. S. A. Majid, B.A.
21st Oct. '52	URDU	Mr. Safdar Hussain Sahib, M.A., L.T.,	URDU LITERATURE	Mr. G. H. Daleel Sahib.
24th Oct. '52	UNION	Principal, J. Franco, M.A., L.T.	UNITED NATIONS DAY	Mr. A. K. A. Abdus Samad.
30th Oct. '52	HINDI & MALAYALAM	Shri. Ramananda *Sharma*	INAUGURAL ADDRESS	Mr. H. Sohanraj Jain.
5th Nov. '52	ISLAMIC HISTORY	Dr. U. R. Ehrenfels, M.A., Ph.D.	ISLAMIC HISTORY AND SOCIAL ANTHROPLOGY	Mr. G. H. Daleel Sahib.
7th Nov. '52	PSYCHOLOGY & LOGIC	Sri. P. Sankaranarayana Ayyar, M.A.L.T.	THE MIND & ITS WORK	Mr. Syed Ismail.
10th Nov. '52	GEOGRAPHY	Mr. M. Vivekananda, M.A., L.T.,	EARTH-QUAKES WITH REFERENCE TO RECENT INDIAN EARTHQUAKES	Mr. K. R. Natarajan.
11th Nov. '52	URDU	Mr. Syed Azmathullah Sahib		Mr. Hamid Hussain Siddique.
12th Nov. '52	TAMIL	Mr. Abdul Kader Sahib, M.A., L.T.	KAMBAR	Mr. A. K. A. Abdus Samad.
13th Nov. '52	HINDI	Mr. Adoni Nandanna	HINDI AS NATIONAL LANGUAGE	Mr. N. Raman Eladam, B.A.
14th Nov. '52	HISTORY	Dr. K. K. Pillai, PH.D.,	ASOKA	Mr. Mir Asad Ali.
17th Nov. '52	UNION	Sri. V. Thiruvenkatachariar, M.A., L.T., & Mr. S. Deva Prasad, M.A.,	Debate: INDIA SHOULD GO BACK TO HER ANCIENT METHODS	Sri. A. Gopalakrishna, M.A.,



THE ENTIRE COLLEGE, 1952—53

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS 23 AUG 1955

22nd Nov. '52	COMMERCE	Mr. H. F. Kapadia, B.A., (Hons)	DEFECTS IN INDIAN TRANSPORT & REMEDIES	Mr. Abdul Azeez.
10th Dec. '52	UNION	Prof. V. Venkataraman, M.A.	HUMAN RIGHTS DAY	Sri. A. Gopalakrishna, M.A.
17th Jan. '53	TAMIL	Mr. A. M. Yousuff Sahib	THE CONTRIBUTION OF MUSLIMS TO TAMIL	Mr. A. K. A. A. Samad.
2nd Feb. '53	HISTORY	Mr. N. Subramania Iyer, M.A.,	MODERN REVOLUTIONS	Prof. V. Venkataraman.
3rd Feb. '53	COMMERCE	Mr. S. M. Fossil	COMMERCIAL EDUCATION IN INDIA	Mr. Abdul Azeez.
5th Feb. '53	URDU		Oratorial contest: Is Religious **Instruction desirable in Colleges at the present time?**	Judges: Mr. M.S.A. Majid Sahib B.A., Mr. Daleel Sahib and Mr. H. H. Siddique Sahib B.A.
6th Feb. '53	UNION		Oratorical contest: IF I WERE THE MAYOR OF MADRAS!	Judges: Begum Amiruddin Saheba, Mr. J. A. Borron and Mr. M. S. A. Majid Sahib.
7th Feb. '53	HINDI		Oratorical contest: Hindi Poets **of the 20th Century.**	Judges: Sri Mahendrakumar Jain Sri N. Raman Eladom B.O.L.
„	MALAYALAM		HOW TO AVOID ANOTHER WORLD WAR	Judges: Sri M. N. Vijayam M.A., Sri N. Raman Eladom B.O.L.
9th Feb. '53	UNION		CARNATIC MUSIC CONTEST	Judges: Sry. Ranganayaki B.A., Sri V. Venkataraman M.A., Sri S.V. Ganapathi Ayyar, M.A.
„	„		HINDUSTHANI MUSIC	Judges: Mr. M.S.A. Majid B.A Mr. Daleel Sahib and Mr. H. H. Siddique Sahib B.A.
„	TAMIL	A. M. Ali.	MY EXPERIENCES IN THE EUROPEAN COUNTRIES	Mr. A. K. A. Samad.
10th Feb. '53	„		Oratorical contest: **Is war Indispensable?**	Judges: Sri Durai Aranganar M.A., M.O.L. Sri Varadaraja Ayyangar M.O.L. Sri M. S. Chellam, M.A.,
	„	Janab A. M. Mohideen, Tirupur	The Art of Speaking	A. K. A. Abdus Samad.
13th Feb. '53	HISTORY	Prof. R. Bhaskaran, M.A.	THE LEAGUE OF NATIONS	Prof. V. Venkataraman, M.A.
23rd Feb. '53	ISLAMIC HISTORY	Mr. Hyder Ali Khan M.A.	THE CORRECT ATTITUDE TO ISLAMIC HISTORY.	Janab M. A. Azeem Sahib B.A., L.L.B., (Cantab.)
26th Feb. '53	UNION	Sri. T. Chengalvaroyan, B.A., LL.B.	VALEDICTORY ADDRESS.	A. K A. Abdus Samad.)

OFFICE BEARERS OF THE VARIOUS ASSOCIATIONS, 1952—53.

****

Principal Ex-Officio President of all the Associations.

Name of Association.	Vice President.	Student Chairman	Student Secretary
UNION.	Sri. A. Gopalakrishna, M. A.,	A.K.A. Abdus Samad.	Mr. M. Kamaldheen.
HISTORY	Sri. V. Venkataraman, M. A.,	Mir Asad Ali.	Mr. S. Abdul Rasheed.
ISL. HISTORY	Mr. Zackriah Badsha, B. A., (Hons)	Mohamed Ismail.	Mr. Syed Amjad Ali.
PSYCHOLOGY & LOGIC.	Sri. K. R. Applachariar, M. A., L. T.	Mahmud Sait.	Mr. P. V. Jagannathan.
GEOGRAPHY.	Sri. S. Manickam, M. A., B. T.,	K. R. Natarajan.	K. Gopalakrishnan.
MATHEMATICS.	Sri. V. Thiruvenkatachariar, M. A., L. T.,	Syed Abdul Jabbar	G. Janardhanam.
COMMERCE.	Mr. T. Md. Dawood Khan, B. Com.,	Abdul Azeez.	A. Abdul Vahab-Musaliar
URDU.	Mr. Hamid Hussain Siddique,	Md. Rahimuddin.	Md. Rizvanullah.
TAMIL	Sri. T. K. Gopala Iyer, B. A.,	V. Athmanathan.	G. Ranganathan.
HINDI & MALAYALAM.	Sri. N. Raman Eladam, B. A., Sri Vijayam M.A.	H. Sohanraj Jain.	Mohanlal Mutaliya.
HOSTEL.	...	...	K. R. Natarajan & T. S. Abdul Lateef.

MANAGING COMMITTEE, STAFF AND STUDENT OFFICE-BEARERS, 1952–53



CONNEMARA
23 AUG 1955
MADRAS

SITTING (*Left to Right*)—Messrs. T. Md. Dawood Khan, A. Gopalakrishna, V. Venkataraman, J. Franco (Principal), Haji Moulvi M. Nazir Husain Sahib (Chairman), M. S. A. Majid (Secretary), K. R. Applachariar, Ghulam Hussain Daleel Sahib, T. K. Gopala Iyer.

STANDING 1st ROW—Messrs. S. Deva Prasad, Zackria Badsha, Abdul Azeez Sahib, J. C. Baynes, N. Raman Eladam, S. Manickam, A. K. A. Abdus Samad (Student chairman), K. Durairaj Chelliah, V. Thiruvenkatachariar, Hamid Hussain Siddiqui Sahib, Syed Safdar Hussain Sahib, P. D. Kannappa Mudaliar.

STANDING 2nd ROW—Messrs. M. Kamaldheen (Student Secretary), Syed Abdul Jabbar, T. S. Abdul Latiff, V. Athmanathan, Abdul Azeez, Md. Rahimuddin, Mir Asad Ali, Mahmud Sait, H. Sohanraj Jain, K. R. Natarajan.

STANDING 3rd ROW—G. Janardhanam, P. V. Jagannathan, S. Abdul Rashid, Syed Ismail, G. Ranganathan, Syed Amjad Ali, Mohanlal Mutaliya, K. Gopalakrishnan, A, Abdul Vahab Musaliar,

உ

இறை வணக்கம்

விண்ணாதி பூதமெல்லாம் தன்அகத்தில் அடக்கிவெறு
வெளியாய் ஞானக்

கண்ணாரக் கண்டஅன்பர் கண்ஊடே ஆனந்தக்
கடலாய் வேறொன்(று)

எண்ணாத படிக்(கு)இரங்கித் தானாகச் செய்(து)அருளும்
இறையே! உன்தன்

தண்ணாரும் சாந்தஅருள் தனைநினைந்து கரமலர்கள்
தலைமேல் கொள்வாம்.

(தாயுமானார்)

இனிய தமிழும் இஸ்லாமியர்களும்

பசுந்தமிழ் பண்டும் இன்றும் என்றும் ஏற்றம் பெற்று வந்தமைக்கும், வருகின்றமைக்கும், வரப்போகின்றமைக்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் தலையாய ஒன்று, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட தமிழர்கள் தாம் தாம் எம்மதத்தினராயினும், தமிழ் மொழியைப் பேணி வளர்த்திருக்கின்றமையே என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். இந்நோக்கங்கொண்டு உழைத்திலரேனில், நாம் நம் பழம் பெரு இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலான சங்க மருவிய நூற்களைப்பெற்று இருக்க இயலாது; பழம் பெருமையையும் அறிந்திருக்க இயலாது. இச்சங்க மருவிய நூற்களைத் தந்தவர்கள் ஒரு குலத்தவர்கள் அல்லர். ஒரு சமயக் கொள்கையினர்கள் அல்லர். வெவ்வேறு குலத்தவர்களும் சமயத்தவர்களுமே ஆவர். அன்னார் அமைத்த இலக்கிய அணிகலன்களையே தண்டமிழ் அணங்கு தாங்கி நிலவி வருகின்றாள். இங்ஙனம் தமிழ் மகட்குப் பணி பூண்ட பிற்கால இனத்தவர் இஸ்லாமியார்களும், ஐரோப்பிய அறிஞர்களுமெனில் அது மிகையாகாது. இவர்களுள் தமிழ் மொழிக்கு இஸ்லாமியர்கள் எம்முறையில் தம் கடனை ஆற்றியிருக்கின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் ஒருபுடை நோக்கமாகும். முற்காலம் முதற்கொண்டே பல தமிழ்ப் புலவர்கள் இஸ்லாமியர் இனத்தில் பெருகத்தொடங்கினர். இஸ்லாமிய சமூகத்தவரைத் தமிழ் மொழி தன் இனிமைப் பண்பினால் ஈர்த்துவிட்டது. இதனால் தான் தாமாகக் கவிபுனையும் நிலையிலும் பல புலவர்கள் அச்சமூகத்தில் தோன்றத் தொடங்கினர்.

இங்ஙனம் புலவர் திலகங்களாக இருந்தவர்களின் வரலாற்றுக் குறிப்பினையும் அன்னார் யாத்த நூற்கள் சிலவற்றினையும் ஈண்டுக் குறிப்பிட்டால், உண்மை நன்கு புலனாகும்.

சவாதுப் புலவர் என்பார் அரேபியாவில் இஸ்லாமியர்களுக்குச் சிறந்த யாத்திரைத் தலமாக உள்ள மேதினாமீது ஓர் அந்தாதியும், முஹ்யித்தீன் ஆண்டவர் மீது ஒரு பிள்ளைத் தமிழ் நூலும் பாடியுள்ளார். இவ்விரு நூற்களை அன்றிச் சில தனிப் பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளன. அவற்றைக் காண விழைவார் தனிப் பாடற்றிரட்டில் கண்டு உணர்வார்களாக. இவற்றோடு இவர் காலத்துச் சேது பதி மகாராஜா வைசூரியால் வருந்திய காலத்தில் அவ்வைசூரி நீங்கும் பொருட்டு, இராஜராஜேஸ்வரியை வேண்டி ஒரு நூல் பாடியதாகவும் நாம் அறிகின்றோம். அதுவே இராஜராஜேஸ்வரி பஞ்ச இரத்தின மாலை என்பது. இதன் பொருட்டு இவர் அம் மகாராஜாவால் சுவாத்தான் என்னும் நிலத்தையும் முற்றூட்டாகப் (வரியிலா நிலமாக) பெற்றதாக உணர்கிறோம்.

முகம்மத் இப்ராஹிம் என்னும் பெயருடைய பெரியாரும் தமிழ்ப் புலமை மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார். இவர் வண்ணங்கள் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தவர். அதன் பொருட்டு இவர் தம் பிள்ளைத் திருநாமமாகிய முகமத் இப்ராஹிம்

என்னும் இயற் பெயர் மாறி, வண்ணக் களஞ்சியப் புலவர் என்றே புலவர் பெரு மக்களால் புகழப்பட்டுவரலானார். இன்னார் பிறந்த ஊர் மதுரைக்கு அண்மையதான மீசல் என்னும் ஊர் ஆதலின், மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் என்று சுட்டப் பட்டுவந்தனர். பல வண்ணங்களே அன்றி, முஹ்யித்தீன் புராணமும் பாடியுள்ளார். இதனை நாகூர் மசூதியில் அரங்கேற்றம் செய் தனர். அக் காலங்களில் பல தடைகள் எழுந் தன. அவற்றிற்கெல்லாம் தக்க விடைகளை அமைதியாக ஈந்தனர். பல்லாண்டு நில உலகில் வாழ்ந்தனர். இவரது இறுதிக் காலம் எண்பத்துஒன்பது எனில், இவரது முதுமையை உணரலாம் அன்றோ?

அலியார் புலவர் என்பாரும் இஸ்லாமிய இனத்துப் புலவரே. இவர் இந்திராயன் படைப்போர், இபுனியந்தன் படைப்போர் என்னும் நூல்களைச் செய்திருப்பதாக அறிகிறோம். இவ்விரு நூற்களும் எவரும் வெருக்கொளத்தக்க அரக்கப் போரை வருணித்திருப்பனவாகும்.

முகம்மத் ஹுசேன் என்பாரும் ஒரு நூல், தமிழ் மொழியில் யாத்துள்ளனர். அது பெண் புத்தி மாலை என்பது.

மதாறு சாயபுப் புலவர் மிதிறுசு நாமா என்னும் தமிழ் நூல் பாடியிருப்பதாகவும் அறிகிறோம்.

எவரும் மறக்கமுடியாத தமிழ்ப் பெரும் இஸ்லாமிய இனத்துக் காவியப் புலவர். உமறுப் புலவர் ஆவார். இன்னார் பாடிய நூலே சீறாப் புராணம் என்னும் சீரிய புராணம் ஆகும். இச்சீறாப் புராணமே முகம்மது நபியின் வரலாற்றையும் அவரது வீரதீரச் செயல்களையும் அறிவிப்பதாகும். நவ ரசங்களும் அமையப்பெற்ற இஸ்லாமிய இனத்துத் தமிழ்க் காவியம் இதுவே, காவியப் பண்பு அத்தனையும் அமையப் பெற்றுக் கவினுற விளங்கும் காவியமும் இதுவே.

மஸ்தான் சாயபு என்பாரும் மாபெருந் தமிழ்ப் புலவர். தாயுமானவரைப் போன்ற தகைமை படைத்தவர். அவர் யாத்த நூல் போலவே தாமும் ஒரு நூலைப் பாடியவர். தாயுமானவர் பாடிய நூல் எங்ஙனம் தாயு மானவர் பாடல் எனப் பெயரினைப் பெற்றுள்ளதோ, அங்ஙனமே இவர் யாத்த பாடலும் மஸ்தான் சாயபு பாடல் என்னும் பெயரினைப் பெற்று விளங்குவதாகும். இப் பாடல் நூலே யன்றி நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம் என்ற பெயரால் இரு நூல் களையும் பாடித் தமிழ் அன்னையை அலங் கரித்துள்ளார்.

குலாம் காதிர் நாவலர் என்பாரும் புலவர் ஆற்றுப்படை பாடிய குலக் கவியே ஆவர்.

இன்னோரன்ன பெருந் தமிழ் இஸ்லாம் இனத்துப் புலவர்கள் தமிழ் அன்னைக்குப் புரிந்த தமிழ்ப் பணியினை யாரேனும் பாராட்டாமல் இருக்க எண்ணுமோ? ஒண்ணாது.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்தாம் தமிழ் மொழியினிடத்து அன்பும் ஆதரவும் காட்டிவந்தனர் என்று கூற இயலாது. பல இஸ்லாமிய வள்ளல்களும் தமிழ் மொழி யினையும் சைவத் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து இருக்கின்றனர். இதற்கு எடுத் துக்காட்டாக ஒன்றினை ஈண்டுக் குறிப் பிடுவோமாக.

ஷெய்கு அப்துல் காதர் மரைக்காயர் ஒரு பெரும் இஸ்லாமியப் பெரியார். இவரைப் பெரிய தம்பி மரைக்காயர் என்றும் அழைப் பர். இவரே சீதக்காதி என்று சிறப்பித்துக் கூறப்படும் சீரிய வள்ளல். இவருக்கும் படிக்காசுப் புலவர்க்கும் நெருங்கிய நட்பு

இருந்தது என்பதைச், சீதக்காதி மறைவு குறித்துப் படிக்காசுப் புலவர் பாடியுள்ள கையறுநிலைச் செய்யுட்களால் நன்கு அறியலாம். படிக்காசுப் புலவர் மறந்தும் புறந் தொழா மாந்தர். மேலும் பெரிய புலவர். அவர் தம் கவியின் சிறப்பினை,

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்த ஏட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் தூய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுடை நளினம் தானே

என்னும் செய்யுளால் அறியலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த புலவர் சிகாமணியார் சீதக்காதி இறந்தமை குறித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று.

பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன
பூதலத்தில்,
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன்
நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி
கொடைமிகுத்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும்
செத்ததுவே.

என்பது இப்பாடலில் சீதக்காதி இறந்ததால் புலமையும் இறந்தது என்று புலவர் கூறுவாராயின், இதிலிருந்து சீதக்காதி தமிழ்ப் புலவர்களை எந்த அளவுக்கு ஆதரித்து வந்தார் என்பது புலனாகிறதன்றோ?

மேலும், தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் தமக்குள் சமய வேற்றுமை பெரிதும் கருதியவர்கள் அல்லர் என்பதும் நமக்குப் புலனாகிறது. சமய வேற்றுமை கருதியிருப்பாராயின், சேதுபதி மகாராஜா வைசூரியால் வருந்திய காலத்து, சவாதுப் புலவர் அந்நோய் நீங்க இராஜராஜேஸ்வரி மீது பஞ்ச ரத்தின மாலை பாடியிரார். இது மட்டும் ஓர் எடுத்துக்காட்டு ஆகாது. தமிழர்கட்கும் இஸ்லாமியர்கட்கும் சமய நெறியில் வேறுபாடில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு, அய்யாசாமி முதலியார் என்பவர், குணங்குடி மஸ்தான் சாயபு மீது குணங்குடி நாதர் பதிற்றுப் பத்து அந்தாதி பாடியிருப்பதாலும் அறியலாம். மஸ்தான் சாயபு பாடிய அகத்தீசர் சதகமும், நந்தீசர் சதகமும் இதற்குச் சான்றாகக் கூறலாம்.

சைவப் பெரும் புலவர்களும் இஸ்லாமிய இனத்தவர்களும் மிக நெருங்கி நட்பு முறையில் பெரிதும் இயைந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது சைவப் புலவர்கள் தம் தெய்வீக நூற்களில் இந்துஸ்தான் ,மொழியினைத் தங்கு தடையின்றி ஆண்டு இருப்பதாலும் நன்கு உணரலாம். இங்ஙனம் தம் அருமை நூல்களில் ஆட்சி காட்டியவர்கள் அருணகிரி நாதரும், குமரகுருபரசுவாமிகளும் ஆவர். அருணகிரிநாதர், ஆண்ட இந்துஸ்தான் சொற்கள் இரண்டு. அவை சலாம், சபாஷ் என்பன. சலாம் என்னும் சொல்லினைச் சுவாமிமலைத் திருப்புகழில்,

"சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடும்
சுவாமிமலை வாழும் பெருமாளே"

என்றும் "சபாஷ்" என்னும் மொழியினைத் திருநள்ளாற்றுத் திருப்புகழில்,

"கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகர் சபாசென
கட்ட வெங்கொடு சூர்கிளை வேரற
விடும் வேலா"

என்று அமைத்துப் பாடியுள்ளார்.

குமர குருபர சுவாமிகள் தம் முத்துக் குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழில் சலாம் என்னும் இந்துஸ்தான் கிளவியினைப் பயன் படுத்தியுள்ளார். அதுவே,

" குமரி இருக்கக் கலாமயில் கூத்தயர்
குளிர் புனம் மொய்த்திட்ட சாரலில் போய்க்
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக்குமாரனைப் போற் றுதும்"

என்பது.

இங்ஙனம் எம்மதத்தினரும் ஒற்றுமை யுடன் தமிழ் நாட்டில் நிலவித் தமிழ் மொழி யினைப் பேணிப் போற்றிவந்தனர் என்பதை நாம் உணர்கையில், நாமும் நம் தமிழ் அன்னைக்கு நம்மாலான தொண்டினைச் செய்யக் கடமைப் பட்டுள்ளோம் என்பதை மறவாமல், ஆவன செய்தற்கு அரும்பாடு படுவோமாக.

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்

தமிழ் நாட்டில் முஸ்லிம்கள்

இன்பத் தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் தொடர்பேற்பட்டு ஓராயிரம் ஆண்டு களுக்கு மேலாகின்றன. இத் தொடர்பு அன்பின் அடிப்படையில் ஏற்பட்டதே தவிர, ஆதிக்கத்தின் மூலம் அன்று. இதற்கு ஆதாரவாக அமைந்த காரணங்கள் பல :

அரபிகள்-தமிழர் தொடர்பு :

இஸ்லாம் நிலைநிறுத்தப்பெற்ற அரபி நாட்டிற்கும், நந்தமிழ் நாட்டிற்கும் இஸ்லாத் தின் இறுதி நபிமுஹம்மது (ஸல்) தோன்று முன்னரே வணிகத் தொடர்பு இருந்து வந்ததை வரலாறு தெளிவுறுத்துகிறது. பருவக் காற்றின் தன்மையை முதன் முதலில் அறிந்து உலகப் படத்தையும் முதலாக வரைந்திருந்த அரபியர், தென் மேற்குப் பருவக் காற்று வீசும்போது அரபியாவிலிருந்து புறப்பட்டுத் தென் இந்தியாவை அடைந்து வர்த்தகம் செய்து, வடகிழக்குப் பருவக் காற்றுடன் தம் நாட்டை அடைந்தனர். அவர்களுடைய வணிகம் மேற்கே ஸ்பெயினிலிருந்து கிழக்கே சீனம் வரை விரிந்திருந்தது எனச் சீன நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் பெரும் அளவில் செய்த வர்த்தகம் குதிரை வர்த்தகமே. ஆண்டு ஒன்றுக்கு 10,000 அரபிக் குதிரைகள் தமிழகத்தில் இறக்கு மதி யாயின என மார்க்கோபோலோ, அப்துல் வாசாப் போன்றோர் எழுதுகின்ற னர். சேர நாட்டைச் சேர்ந்த கொல்லம், கோழிக்கோடு, பாண்டி நாட்டைச் சேர்ந்த தொண்டி, பாசிபட்டினம், காயல்பட்டினம், சோழ நாட்டைச் சேர்ந்த நாகபட்டினம், காரைக்கால், காவிரிப்பூம்பட்டினம் முதலி யவை அரபியரின் கலங்கள் அணைந்த துறை முகங்களில் சிலவாகும்.

இஸ்லாம் பரவிய தெப்படி :

"நிறுத்தால் சரியாக நிறுங்கள், அளந்தால் சரியாக அளங்கள்" என்ற திருக்குர்ஆனின் போதனையையும், "வர்த்தகர்கள் தலை சிறந்த மதாசாரியார்களுக்கு ஒப்பானவர்கள். அவர் கள் அல்லாஹ்வின் உண்மைத் தொண்டர்

கள். ஒருவன் நல்ல நெறியுடையவனா அல்லனா? என்பதை அறிவதற்கு வர்த்தகமே உண்மையான சோதனை...பண்டமாற்றுச் செய்யும்போதே ஒருவனது அன்பும் சமயத் திட்பமும் வெளியாகும்'' என்பன போன்ற, நபி பெருமானாரின் பொன் மொழிகளேயும் உணர்ந்திருந்த அரபி முஸ்லீம் வணிகர்களின் நம்பிக்கையும், நேர்மையும், உயரிய நடத்தையுமே தமிழகத்தில் சிறந்த இஸ்லாமியப் பிரசாரமாக அமைந்தன.

''ஒன்றே குலம், ஒருவனே தேவன்;'' ''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்'' என்ற விழுமிய கொள்கைகளின் வழிவந்த தமிழ் நாட்டிற்கு; இஸ்லாத்தின் 'ஏகதெய்வ' போதனையும், சகோதரத்துவமும், சமத்துவமும் இயைந்திருந்த காரணத்தாலும், சமுதாயத்தில் 'ஏது காரணம் பற்றியோ' இழி நிலையடைந்திருந்த மக்களுக்கு விடுதலையளிக்கும் ஓரே மார்க்கமாக இருந்ததாலும் ''இஸ்லாம்'' பரவலாயிற்று.

அரபிய வணிகர்களுக்கடுத்து இஸ்லாத்தைத் தமிழ் நாட்டில் போதித்த பெருமை, தமிழக மெங்கணும் அடங்கியுள்ள இஸ்லாமிய மஹான்களான அவ்லியர்களேச் சார்ந்தது. தம்நலங் கருதாத அவர்களின் சமூகப் பணியும், ஆத்மீகப் போதனையும் இன்றளவும் பயன் விளைத்து வருகின்றன. திருச்சி தபலே ஆலம் பாதுஷா, நாகூர், ஷாஹுல் ஹமீது அவ்லியர், ஏர்வாடி இப்ராஹீம் ஷாஹ் ஒலியுல்லாஹ், காரைக்கால் செய்யிது தாவூது மஸ்தான் புகாரி ஆகியோர் இவ்வழியில் அளப்பரிய தொண்டியற்றிய—குறிப்பிடத்தக்க—பெரியோர்கள் ஆவர்.

அமுத குர்ஆனின் இனிய போதங்கள் தமிழகத்தில் கைக்கொள்ளப்பட்டபோது, என்றுமில்லா மறுமலர்ச்சி ஏற்பட்டது. இஸ்லாத்தால் தமிழுக்கும்-தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்ட நன்மைகள் பலப் பல. அவற்றில் சிலவற்றை முறையே ஆராய்வோம்:

மொழித் துறையில் :

தமிழ் முஸ்லீம்களின் வேதமொழி அரபியாயினும் அவர்கள் பிற மொழியையே பேணித் தம் மொழியைப் புறக்கணித்தவரல்லர்; போற்றி வளர்த்தவராவர். திராவிட மொழிக் குழுவினருள் தம் தாய் மொழியில் சிறந்த மத இலக்கியங்களேப் படைத்திருக்கும் பெருமை, தமிழ் முஸ்லீம்களுக்கு உண்டு.

உமறுப் புலவரின் சீறாப் புராணம், முஹம்மது இப்ராஹீம் புலவர் இயற்றிய நூறுத்தீன் புராணம், ஜவ்வாதுப் புலவர் பாடிய முஹ்யித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ், காசீம் புலவரின் 'திருப்புகழ்' நயினார் முஹம்மது புலவர் எழுதிய 'பெண்புத்தி மாலை,' பீர்முஹம்மது ஒலியுல்லாஹ்வின் ஞானமணிமாலை, மஸ்தான் சாஹிப் பாடல்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அண்மையில் காலம் சென்ற முதுபெரும் புலவர், மகாமதி, கோட்டாறு கா. ப. ஷெய்கு தம்பிப் பாவலர், அனைவரும் வியக்கும் வண்ணம் நூறு காரியம் செய்த 'சதாவதானி' யாவார். சமீப காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த சதாவதானி அவர் ஒருவரே; பொதுவாகத் தமிழ் இலக்கியத் துறையில் அவர் தொண்டு உச்சிமேல் வைக்கத் தகுந்தது. அப்பெரியார் எண்ணற்ற தமிழ் இலக்கியங்களைத் திருத்திப் புதிப்பித்துள்ளார். கடைசி காலத்தில் அவர் பாடிய ''நாயக மான்மியம்'' சிறந்த இலக்கிய நயம் படைத்தது.

இத்தகைய முறைகளில் தமிழ் முஸ்லீம்கள் தம் மொழியை வளம் செய்துள்ளனர்.

அன்றியும் தம் தினசரி வாழ்விலும் நல்ல தமிழ்ச் சொற்களை வழங்கிவரும் மக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இஸ்லாமியர் தங்கள் வணக்க இடங்களைப் 'பள்ளிகள்' என்றும், வணக்க முறைக்குத் தமிழுக்கே சிறப்புத்தரும் 'ழ' கரத்தைக் கொண்ட 'தொழுகை' என்றும், திரு நபியை நபிகள் 'நாயகம்' என்றும், பெண்களின் முன் மாதிரியான பெருமானாரின் திருப் புதல்வி பாத்திமாவைப் பாத்திமா 'நாச்சியார்' என்றும் கூறுகின்றனர்.

ஆட்சித் துறையில் :

ஆட்சித் துறையில் முஸ்லிம்கள் நல்ல பணியாற்றியிருக்கின்றனர். தமிழ் மன்னர்களிடம் குதிரை வீரர்களாகப் பணிபுரிந்த முஸ்லீம்கள் 'இராவுத்தர்' என அழைக்கப் பட்டனர்.

சோழரின் கடற்படை வீழ்ச்சிக்குப் பிறகு தென்னாட்டில் ஒரு சிறந்த கடற் படையைச் சிருஷ்டிக்கத் திப்பு ஸுல்த்தான் விரும்பினார். அவருடைய எண்ணம் நிறைவேறாது போயிற்று. சேர நாட்டைச் சேர்ந்த ஸாமரின்கள் போர்த்துகீசியருக் கெதிராக நடத்திய போரில் ஸாமரினின் கடற்படைத் தளபதிகளாக இருந்தவர்கள் மரைக்காயர்கள் ஆவர். 'மரக்கல ராயர்' என்னும் சொல் மருவி 'மரக்காயர்' என ஆயிற்று.

புலவர்களுக்கு ஈந்து ஈந்து சிவந்த கையினைப் பெற்றிருந்த வள்ளல் சீதக்காதியின் முழுப் பெயர், செய்யிதப்துல் காதிர் மரைக்காயர் என்பதாகும். முகலாய மன்னர் அவுரங்கசீபின் வேண்டுகோளுக்கிணங்க வங்கத்தில் அவ்ரங்கரின் பிரதிநிதியாகச் சீதக்காதி சில காலம் அரசோச்சினார். வங்கத்தை ஆண்ட முதல் தமிழ் 'கவர்னர்' வள்ளல் சீதக்காதியே வங்கத்தின் தட்ப வெட்ப நிலை தமிழ் நாட்டுச் சீதக்காதிக்கு உடன்பாடாயில்லாமையால், மீண்டும் தமிழகம் திரும்பி இராமநாதபுரம் தனியரசில் சேவை புரிந்தார்.

இராமேஸ்வரத்திலுள்ள கோயில் பணி சீதக்காதியின் மேற்பார்வையிலேயே நடந்ததாகச் சொல்லப்படுகிறது. கீழக்கரையில் சீதக்காதி கட்டியுள்ள பள்ளியும், இராமேஸ்வரம் கோயிலும் ஒரே விதமான கற்களால் கட்டப்பட்டிருப்பது மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

மாலிக்காபூர் என அழைக்கப்படும் மாலிக் அப்துல் கபூர் தென்னாட்டில் படையெடுத்து வந்தபோது மதுரையைப் பாண்டிய மன்னனின் தளபதியாக இருந்த முஸ்லீம் ஒருவரே காத்தார் என வரலாறு கூறுகிறது.

கலைத் துறையில் :

கட்டடக் கலைத் துறையிலும் முஸ்லீம்கள் கூட்டுறவு, தமிழகத்தில் நற்பயன் விளைத்துள்ளது. தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் உள்ள பள்ளிகளும், குறிப்பாகத் தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையில் உள்ள உயர்நீதி மன்றமும், (High Court) பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபமும், (Senate Hall) அறநெறி வளர்ச்சி அலுவலகமும், (P.W.D.) தேசிய கலைக் காட்சி நடத்தப்படும் 'சந்தனக் கட்டடமும்' இஸ்லாமியர் கலைத் திறனைத் தெற்றென விளக்குபவை. மதுரைத் திருமலை நாயக்கர் மண்டபமும் இஸ்லாமியக் கலை உயர்வைக் குறிப்பதேயாகும்.

சமுதாயத் துறையில் :

சமுதாயத் துறையில் இஸ்லாம் சிறந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற பண்டைத் தமிழர் கொள்கையை நல்ல முறையில் செயல் படுத்திக் காட்டியவர் முஸ்லிம்கள் ஆவர். பொதுவாக இன்றைய

தமிழரிடையே தோன்றியுள்ள சமுதாயச் சீர்திருத்த நோக்கிற்கும், பலவிதமான முன்னேற்றக் கிளர்ச்சிக்கும் இஸ்லாமும் ஒரு காரணமாகும்.

பொருளாதாரத் துறையில் :

பொருளாதாரத் துறையில் தமிழ் முஸ்லிம்கள் பணி அளப்பரியது. பொதுவாகத் தமிழ் முஸ்லிம்கள் அனைவரும் நல்ல உழைப்பாளிகள். நேர்மைக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள். கைத்தறி, பாய் முடைதல் போன்ற குடிசைத் தொழில்களில் எண்ணற்ற முஸ்லிம் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. நல்ல வருமானம் தரும் தேயிலை, ஏலம் முதலிய தோட்டங்களில் பெரும்பாலானவை முஸ்லிம்களிடம் இருக்கின்றன. ஏற்றுமதி வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க தோல் வர்த்தகமும் முஸ்லிம்கள் வசம் இருக்கிறது.

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் மூதாட்டியின் போதனையைத் தக்க வழியில் கடைப்பிடிப்பவர் தமிழ் முஸ்லிம்களே யாவர். பர்மா, இந்தோசீனம், சீயம், மலாயா, ஜாவா, சுமத்திரா போர்னியோ, முதலிய தூரக் கிழக்கு நாடுகளிலும், நம் சேய் நாடான ஈழத்திலும், தமிழ் முஸ்லிம்கள் மதிப்புக்குரிய வணிகர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

மலாயா, பர்மா, முதலிய நாடுகளில் தமிழ் முஸ்லிம்கள் சோலியர் (Chulias) என அழைக்கப்படுகின்றனர். 'சோழ நாட்டார்' என்பது மருவியே சோலியர் என ஆயிற்று.

வரலாற்றுத் துறையில் :

பண்டைத் தமிழரின் பண்பாட்டையும் வாழ்க்கை முறைகளையும் அறிய 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டிற்கு வந்த அல். பெரூனி, 12-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியின் தொடக்கத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த ராஷியுத்தீன் ஆகியோர் எழுதிய நூற்களும், உலகம் சுற்றிய பிரபல அரபி, இப்னு பதூதாவின் பிரயாணக் குறிப்புக்களும் பெரிதும் உதவுகின்றன.

தமிழ் முஸ்லிம்களுக்கும் மற்றத் தமிழருக்குமிடையே தொடக்க முதலே பெருமைப்படத்தக்க உறவு முறை இருந்து வந்திருக்கிறது, இருந்தும் வருகிறது. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" என்பது பண்டைத் தமிழர் பண்பாடு. "தன்னைப் போல் பிறரையும் நேசி!" என்பது இஸ்லாத்தின் போதனை. இத்தகைய விழுமிய கொள்கை யுடையோரிடத்திலே என்றென்றும் நட்புறவு வளர்ந்து வருவதில் வியப்பென்ன இருக்க முடியும்?

ஆ. கா. அ. அப்துல் ஸமது
(இரண்டாம் வகுப்பு)

பெண் மனம்

பிற பெண்களின் அழகை ஆராய ஆசைப் படுவது பெண்களின் பொதுவான இயல்பு. ஆனல், ஒருத்தி தன்னைவிட உண்மை யிலேயே அழகாக இருந்தாலும் அவளது அழகை வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்ள ஒரு பெண் தயங்குகிருள்.

இலக்கியம் மனித வாழ்க்கையின் கண்ணுடி என்று கூறப்படுகிறது. வாழ்க் கையில் ஒரு பகுதியில் காணும் உண்மை களைக் கவிஞன் தம் கவிதைகளில் வெளிப் படையாகவோ, அல்லது திரை மறைவா கவோ ஆங்காங்கே பரவலாக வெளியிடு வதைக் காண்கிருேம். மேலே கூறிய பெண் ணின் இயல்பைக் கவிஞர் ஒருவர் நல்ல முறையில் உணர்த்துகிருர்.

பெண்கள் மூக்குத்தி அணிவதை நாம் பார்க்கிருேம். மகளிரின் அழகான மூக்கை எள்ளுப் பூவிற்கு உவமிப்பது கவிமரபு எனலாம். மூக்குத்தியை அணிந்த ஒரு பெண்ணைப்பற்றிக் காதற் பிரபந்தத்தில் ஒரு பாடல் வருகிறது. எள்ளுச் செடியில் பூத்த வெண்மையான பூவின் இதழ் விளிம் பில் உறையும் பனித்துளி போல அந்தப் பெண் அணிந்திருந்த மூக்குத்தியில் பதிந் திருந்த முத்து சுடர் விட்டதாம். அப் பாடல் இதுதான் :

" எள்ளிளம்பூ விற்கோத்த
விண்ணீர்த் துளியெனவே

விள்ளும் முகமிலங்க
மின்னும் மூக்குத்தியிட்டாள் "

(குற்ருலக் குறவஞ்சி)

குற்ருல நகர வீதியில் பெண்கள் ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் வருகிருர்கள். வஸந்தவல்லி அப்பெண்களில் அழகில் தலைசிறந்தவளாகத் தோன்றுகிருள். மற்ற வர்கள் அவள் எழிலைக் கண்டு வியக்கிருர்கள். வஸந்தவல்லி, தங்களைவிட எவ்விதத்தில் அழகானவள் என்ற கேள்வி அவர்கள் நெஞ்சில் எழத்தான் செய்யும். வஸந்த வல்லி சிரிக்கிருள். அவள் சிரிக்கும்போது தோன்றும் வெண் பற்கள் முத்தை நிகர்த் தவை போலத் தோன்றுகின்றன. கவிஞர் அப்பற்களைப் பற்றி,

" கத்துந்திரை கொழித்த முத்துநிரை
பதித்த பல்லினுள் "

என வர்ணிக்கிருர். மற்றப் பெண்கள் வஸந்த வல்லியின் அழகைக் கூர்ந்து நோக்கும் போது, மற்ருேர் அழகுப் பொருளும், வஸந்தவல்லியின் சிரிப்பில் வெளிப்படும் பற்களை எட்டிப் பார்க்கிறது. தன்னைப் போன்ற பல் என்கிருர்களே, அந்தப் பல் தன்னைவிட அழகா என எட்டிப்பார்க்கிற தாம், வஸந்தவல்லி அணிந்துள்ள மூக்குத்தி யில் அமைந்த முத்து.

" பல்லினழகை எட்டிப்பார்க்கும்
மூக்கிலொரு முத்தினுள் "

என்கிருர் கவிஞர்.

பிற பெண்ணின் அழகை 'எட்டிப்பார்க்க' விரும்பும் மற்ருெரு பெண்ணின் சாதாரண இயல்பை மிகக் கச்சிதமாகவும், நளினமா கவும் ஒரே அடியில் சித்திரித்துக் காட்டு கிருர் திருக்குற்ருலக் குறவஞ்சி ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர். இதுதான் கவிஞர்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு.

ஆ. கா. அ. ஆஹ்மத் இப்ராஹீம்
(இரண்டாம் வகுப்பு)

மாலை

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாளாதலால் மாலையில் எனக்குச் சிறிது ஓய்வு இருந்தது. மாலை நேரத்தை எப்படிக் கழிக்கலாம் என்று எண்ணமிட்டேன். அப்பொழுது மாலைக் காலத்தை மகிழ்ச்சியுடன் கழிக்க என்னென்ன வழிகள் உள்ளன என்பதைப் பற்றிக் கணக்கெடுத்தேன். சினிமா, விளையாட்டு மைதானம், வாசகசாலை, நூல் நிலையம், பூங்கா, பொதுக் கூட்டங்கள், இன்னோரன்ன பல வசதிகளும் மக்களின் மனத்தை மாலை நேரத்தில் மகிழ்ச்சியுறச் செய்கின்றன என்பதையுணர்ந்தேன். ஆனால், அன்றைய மாலையைக் கழிக்க, மேற்கண்ட வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல், கவிகள் வருணிக்கும் மாலை வசந்தத்தைக் காண நினைத்தேன்.

மாலையின் அழகைக் கண்டு களிக்கக் கருதினேனே தவிர, மக்கட் பெருக்கமும் மாட மாளிகைகளும் நிறைந்துள்ள இப்பட்டினத்தில் என் எண்ணம் நிறைவேற வழியில்லை. எனவே, மூன்று மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். வழியில் எங்குப் பார்த்தாலும் சிறிய பெரிய கடைகளும், வாங்குவோர் விற்போர் இவர்களின் கூச்சலும், நாட்டுப்புறத்தார் "அந்திக் கடைகள்" என்றழைப்பதை ஞாபகப்படுத்தின. நாட்டுப்புறத்தாரைச் சொல்வானேன்? நகரத்திலுள்ள நாம் கூடத்தான் "Evening Bazaar" என்று ஒரு குறிப்பிட்ட கடைத்தெருவை ஆங்கிலத்தில் அழகாக அழைக்கிறோம்.

தினமும் காலையிலேயே ஆலைக்குச்சென்று வேலை செய்துவிட்டு மாலையில் ஆனந்தமாகத் திரும்பும் தொழிலாளர்கள் அவ்வழியே வருவார்கள். ஆனால், அன்று விடுமுறையாதலால் அவ்வளவு பெரிய ஜனத்திரள் கிராமத்தை நோக்கிச் செல்லவில்லை. எனினும், அந்த மாலை நேரத்தில் மனிதர்களின் நடமாட்டம் சிறிது அதிகமாகத்தான் இருந்தது. இவைகளை நினைத்துக் கொண்டே நடக்கும் பொழுது வழியில் ஒரு நகைக் கடையைக் கண்டேன்.

நகைக் கடையில்தான் எத்தனை எத்தனையோ விதமான மாலைகளை வைத்திருப்பார்களே! கல் மாலைகள், காசுமாலைகள், வைர மாலைகள், "நெக்லெஸ்" என்று நாகரிகமாக அழைக்கப்படும் மாலைகள் முதலிய பல்வேறு வித மாலைகள் இருக்கின்றன. வரிசையாக நான் அவைகளின் அழகையும் வேலைப்பாட்டையும் கவனித்துக்கொண்டு வரும்பொழுது ஓர் அழகான முத்து மாலையைக் கண்டு மயங்கினேன். "லக்ஷ்மிபுர அரசனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் அக்குடும்பச் சொத்தான ஒரு மாலையை அணிந்திருந்தாள். துரதிர்ஷ்டவசமாக எதிரிகளின் படையெடுப்பால் அரசகுமாரியும் அரசனும் பிரிந்து நாட்டைவிட்டு வெவ்வேறு திசைகளில் ஓட வேண்டியிருந்தது. அவர்கள் பல இன்னல்களுக்கு இலக்கானார்கள். கடைசியில் அரசன் ஒரு நகைக்கடையை வைத்துத் தான் வாழ்க்கையை நடத்திவந்தான். ஒரு நாள் ஒரு பெண் அந்த நகைக்கடையில் ஒரு முத்து மாலையை விற்க வந்தாள். அந்த முத்து மாலையைக் கண்ட அரசன், பழைய ஞாபகங்களால் தூண்டப்பட்டு, ஒவ்வொரு முத்தையும் கூர்ந்து நோக்கினான். "லக்ஷ்மிபுரம்" என்ற வார்த்தைகளிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்துக்களில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டான். உடனே அரசன் அப்பெண்ணை விசாரித்துத் தன் மகளைக் கண்டுகொண்டான்.........." என்று நான் சமீபத்தில் படித்த ஒரு நாவலின் கதை ஞாபகத்திற்கு வந்தது. அத்துடன் இந்த மாதிரி முத்து மாலையை வைத்து

எத்தனையோபேர் துப்பறியும் கதைகளும் நாவல்களும் எழுதியிருக்கிறார்கள் என்று எண்ணமிட்டேன். என்னே, மாலையின் பெருமை!

பொன் மாலையைப்பற்றி நினைக்கும் பொழுது நாம் எப்படிப் பூமாலையை மறக்க முடியும்? வண்ணமும் வாசமும் நிறைந்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் மிக நேர்த்தியாக இருக்கின்றன. மலர் மாலைகளி லும் ரோஜா மாலைகள், ஜவந்திமாலைகள், மல்லிகை மாலைகள் போன்ற பல வகைகள் இருக்கின்றன. இந்துக்களின் திருமணத்தில் "மாலை மாற்றுதல்" என்பது முக்கியமான நிகழ்ச்சியாகும். இன்னும் நாள்தோறும் ஊர் தோறும் சென்று பிரசங்கம் செய்யும் பெரி யார்களுக்கும் பூமாலைகளைப் போட்டுத் தானே நாம் அவர்களைக் கௌரவிக்கிறோம். ஆனால், சில குறிப்பிட்ட பிரசங்கிகளுக்கு நாம் கதர் (நூல்) மாலைகளையும், மற்றும் சில ருக்குச் சரிகை மாலைகளையும் அணிவிக்கி றோம். சொல்லின் செல்வனை ஆஞ்சநேய ருக்குப் பூமாலை, நூல்மாலை இவைகளை அணி விக்காமல், வடைமாலை சாத்துவதை இன்று கூட நாம் பல இடங்களில் காணலாம். சிவ பெருமான் இவ்வளவு மாலைகளையும் விட, நச்சுப் பையை வைத்திருக்கும் நாகத் தையே மாலையாகப் போட்டுக்கொண்டுள் ளார் என்றும், திருமால் நரசிம்மாவதாரம் எடுத்து இரணியனின் குடலை மாலையாக அணிந்துகொண்டார் என்றும் நாம் படித்தி ருக்கிறோம்; படத்தில் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். அப்பொழுது வழியிலிருந்த ஒரு ஹோட்டலின் ரேடியோவிலிருந்து "பாமாலைக் கிணையுண்டோ, சுப்பிரமணிய பாரதியே-நீ-பக்தியுடன் தொடுத்த பாமா லைக்கு இணையுண்டோ" என்ற பாடல் கம்பீரமாக ஒலித்துக்கொண்டிருந்தது. அதைக் கேட்டதும் தான் பூமாலையைத் தவிரப் பாமாலை என்று ஒன்று உளது என்ற நினைவு வந்தது. கவிகள் இறை வனின் பாத மலர்களில் பாமாலை சூட்டிப் பணிவார்கள். ஆழ்வார்கள் பாடிய பாசு ரங்களும், நாயன்மார்கள் பாடிய தேவா ரப் பாடல்களும் பைந்தமிழ்ப் பாமாலை களல்லவா? குமரகுருபர சுவாமிகள் பாடிய பாடல்களில் சிறந்தவை "சகல கலாவல்லி மாலை, இரட்டைமணிமாலை, பண்டார மும் மணிக்கோவை" என்ற பெயருடைய பா மாலைகளாகும். இறைவனுக்கு ('எழுத்தறி வித்தவன் இறைவனாகும்' என்று கருது வதால் ஆசிரியரையும் இங்கு இறைவன் என்று அழைப்பதில் தவறில்லையல்லவா!) மட்டிலும் மாலைகள் சூட்டாமல், தமிழ்க் கவிகள் சிறந்த நூல்களுக்குக்கூடப் பாமாலை கள் பாடியிருக்கிறார்கள். இதற்கோர் உதார ணம் 'திருவள்ளுவமாலை' ஆகும்.

'திருவள்ளுவமாலை' என்று கூறுமிடத்து 'மலரும் மாலையும்' என்ற தலைப்பில் திரு. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் எழுதிய கவிதைத் திரட்டும் கவனத்திற்கு வருகிற தல்லவா? 'அழகும் மணமும் நிறைந்த பல வித மலர்கள்போல, எளிமையும் இனிமை யும் நிறைந்த தனிப் பாடல்களும், பலநிறப் பூக்களை ஒருங்கே தொடுத்து மாலையாகப் பார்க்குங்கால், அது எம்முறையில் கண்ணுக் கும் கருத்துக்கும் கவர்ச்சியாக இருக் கிறதோ, அம்முறையில் அமைந்துள்ள சில தொடர் பாடல்களும் நிறைந்துள்ள ஒரு நூல்' என்று அந் நூலுக்குப் பெயர்க் காரணம் கூறுகிறார்கள்.

நிற்க, பழங்காலத்தில் தமிழ் மூவேந்தர் களான சேர, சோழ, பாண்டியர்கள் முறையே பனம்பூமாலை, ஆத்திப்பூமாலை, வேப்பம்பூமாலை முதலியவற்றை அணிந் திருந்தனர். இன்னும் போருக்குப் புறப்

படும் பொழுது வஞ்சிசூடியும், கோட்டையை முற்றுகையிடும்பொழுது உழிஞைசூடியும், வெற்றிபெற்றுத் திரும்பும்பொழுது வாகை மாலைசூடிப் பவனிவருவதும் பழங்கால அரசர்களின் வழக்கம். முற்காலத்தில் வயந்தமாலை, வசந்தமாலை என்று மக்கட்குப் பெயரிட்டுங்கூட அழைத்தனர் என்பது மணிமேகலை போன்ற நூல்களிலிருந்து புலப்படுகிறது.

இதற்குள் நான் கிராமத்தருகில் வந்து விட்டேன். அப்பொழுதுதான் சூரியன் தன் வெம்மையைத் தணித்து ஆகாயத்தில் செந் நிறத்தைப் பரப்பி மலைவாயிலில் விழுந்து, மறைந்துகொண்டிருந்தான். தென்றல் ஜிலு ஜிலு என்று வீசிக்கொண்டிருந்தது. அருகில் இருந்த ஏரித் தண்ணீர் பொன்னிறம் பெற்றுப் பொலிந்தது. முல்லையும் ஆம்பலும் மலர்ந்தன. பறவைகள் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தன. பசுக்கள் வீடுகளை நோக்கி மகிழ்ச்சி பொங்கக் கழுத்து மணிகள் ஒலிக்க வந்துகொண் டிருந்தன. நான் மாத்திரம் ஒரு கவியாக இருந்தால், அந்த மாலையின் அழகைப் பாடி வருணித்திருப்பேன்.

சிறிது நேரம் கிராமத்தில் இயற்கையின் எழிலை அநுபவித்துவிட்டு, வீடு திரும்பலானேன். வழியில் இருவர் மிகவும் ஆரவாரத்தோடு சமீபத்தில் நடந்த 'டெஸ்ட் மாட்சை'ப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். "உனக்கு என்னய்யா தெரியும்? 'காமாலை' உடையவனுக்குக் கண்டது எல்லாம் மஞ்சளாகத்தான் தோன்றும்........"என்றார் ஒருவர். (காமாலை என்பதும் பாமாலை, பூமாலை போல ஒரு மாலையாக இருக்குமென்றோ அல்லது புரட்சித் தமிழில் காசு மாலை என்பதைக் காமாலை என்று சொல்லலாமென்றோ எண்ணிவிடாதீர்கள்! காமாலை என்பது ஒருவகைக் கண் நோய்.) கிரிக்கெட் என்று சொல்லும்பொழுது 'காலையிலிருந்து மாலைவரை வெயிலில் இருபத்திரண்டுபேர்கள் விளையாடுகிற விளையாட்டை இருபத்திரண்டாயிரம் மக்கள் பார்த்து ரசிக்கிறார்களே அதைப்போல........என்று யாரோ ஒரு பெரியவர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அத்துடன்,

"காலையில் எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலைமுழுவதும் விளையாட்டு—என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா."

என்று விளையாட்டிற்கு உகந்த நேரம் மாலையே தவிர, பகல் முழுவதும் இல்லை என்று பாரதியார் குறிப்பால் உணர்த்துவதும் நினைவிற்கு வந்தது. இவைகளை ஒப்புக்கொண்டால் கிரிக்கெட் விளையாட்டு ஒழிந்துவிடும். இதனால், வேலை செய்யாமல் 'மாச்சி'கள் தோறும் மக்கள் சென்று, வெயிலில் வாடி, காலத்தையும், காசையும், காயத்தையும் வீணாக்காமல் தேசப்பணியில் அவைகளைச் செலவிடலாமல்லவா?

இவ்வாறு சிந்தித்துக்கொண்டு வழியிலிருந்த கோயிலுக்குச் சென்று திருமாலை வணங்கிக் கையில் இருந்த கடையில் வாங்கிய-பூமாலையைச் சாத்தி, ஆழ்வார்களின் பாமாலைகளில் ஒன்றை நினைத்து, 'மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்து, மனம் உருகிப்பாடித் துதித்தேன். திருமாலையே பார்த்துக்கொண்டிருந்த என் "காமாலை"க் கண்களுக்குப் பெருமாளின் கழுத்திலிருந்த மாலையில் உள்ள வைரக்கற்களில் எல்லாம் திருமாலின் உருவம் தெரிந்தது. 'நான் நிறையப் புகழ் மாலைகள் சூடவேண்டும்,' என்று இறைவனிடம் இறைஞ்சினேன். என் விருப்பம் ஈடேறுமா?

கே. கோபாலகிருஷ்ணன்,
(முதல் வகுப்பு)

மாணவர்களுக்கு செக்ஷன் 144

என்றழைக்கப்படுகின்ற இக்கட்டுரைத் தலைப்பைப் பிறர் கேள்விப்பட்டவுடன் ஒரு சிலர் வியக்கலாம்; ஏனையோர் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். ஆனால் உண்மையில், மாணவர் சமுதாயம் அரசியலில் ஈடுபட்டு எவ்வாறு சீர்கேடடைந்திருக்கிறதென்பதைப் பற்றியும் அரசியலில் மாணவர் பங்கு என்ன என்பதைப்பற்றியும், மாணவர்கள் எப்போது, எப்படி நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசியலில் மாணவர்களின் இன்றுள்ள நிலை

மாணவர் சமுதாயமாகிய திருவுருவத்தை அரசியல் கண்ணாடியில் பார்த்தால், தன்னுடைய சுய உருவத்தை இழந்து கோரத் தாண்டவமாடுவது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்கு மென்பது வெள்ளிடைமலை. அதனால் மாணவர் சமுதாயம் தன்னுடைய பழய அழகான உருவத்தை இழந்துவிட்டதுமல்லாமல் இப்போது அது காட்சியளிக்கக்கூடிய கோர உருவத்தைக் கண்டும் காணாததுபோல இருந்தும், கண்ணை மூடிக்கொண்டு கார் விடுவதைப் போன்று எதிர்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதையும் உணராத நடைப் பிணமாக இருக்கிறது—நெட்டுயிர் போக்குற்ற பிணமாகக் காட்சி யளிக்கின்றது—மூச்சு விடுகின்ற உருவமாக விளங்குகின்றது.

ஆகவே, இதிலிருந்து அரசியலாகிய கடலில் மாணவர் சமுதாயமாகிய படகிலே அறியாமை என்னும் துடுப்பினால் மாணவர்கள் உல்லாசப் பிரயாணம் செய்கின்றார்கள், பல நாட்களாக. ஆனால், அரசியல் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டால், இந்த மாணவர் சமுதாயமாகிய படகும், அதிலிருக்கும் மாணவர்களும் எக்கதியை அடைவார்களென அந்த மாணவர்கள் நன்கு அறிந்திருந்தும், இன்னும் அவர்கள் அரசியல் கடலில் போக நினைக்கின்றார்கள். ஏன் போய்க்கொண்டேதானிருக்கிறார்கள் ?

உதாரணமாக, மாணவர்கள் அரசியல் கட்சிகளின் உண்மையான உருவத்தை அறியாமல் அரசியலைப்பற்றியும், நன்கு அறியாமல் தங்கள் அறியாமையால் தம் தம் இஷ்டப்படி பலர் பல வித கட்சிகளில் சேர்ந்துகொண்டு எங்குச் சென்று யாவரிடமும் எதைப்பற்றிப் பேசினாலும் கட்சிக் கருத்துக்களைக் கருத்திலமைத்துக்கொண்டு பேசுவது, வாதிடுவது, சில சமயங்களில் சண்டையிடுவது போன்ற அநாகரிக அருவருக்கத்தக்க விஷயங்களிலீடுபட்டிருக்கின்றார்கள். இது உண்மையில் வருந்தத்தக்கது. மேலும், கண்டிக்கத் தக்கது. மாணவர்களின் இந்த அரசியல் குழப்பத்தில் அவர்களின் முக்கிய அலுவலான கல்வியை மறந்து விடுகிறார்கள். இதனால் கல்வியில் சிரத்தையும், ஊக்கமும், கவனமும் செலுத்த முடியாமல் போகின்றது என்பதையும் சொல்லாமல் யாவரும் அறிந்துகொள்ளலாம். இதனாலேயே நாட்டில் கல்வி வளர்ச்சியும், கல்வியின் மதிப்பும், தரமும், மாணவர் சமுதாயத்தில் மாணவர்களுக்குள்ளேயுள்ள ஒரு சிறந்த பொருளான ஒற்றுமையுணர்ச்சியும் குறைந்து வருகிறது எனத் துணிந்து கூறலாம்.

மாணவர்களும் நாட்டுச் சேவையும்

மாணவர் சமுதாயம் மேற்கூறிய அரசியல் சிக்கல்களிலிருந்து நீங்க ஒரே ஒரு வழி சொல்லுவேன். அதாவது, மாணவன் கட்சி சஞ்சிகைகளையும், புத்தகங்களையும் வாங்கி வாசிப்பதில் குருடனாகவும், கட்சிக் கொள்கைகளைப் பிறரிடம் எடுத்து விவாதிப்பதில் ஊமையாகவும், கட்சிக் கொள்கைகளைப் பற்றிப் பிறர் விவாதிப்பதைக் கேட்பதில் செவிடனாகவும், கட்சிக் கொள்கைகளை ஆராய்ச்சி செய்வதில் அறிவில்லாதவனாகவும் விளங்கவேண்டு மென்பதுதான். இதற்காகத்தான் மாணவர்கள் தங்கள் மனமாகிய நகரத்தில் செக்ஷன் "144" போடவேண்டும்.

மேலே கூறப்பட்ட தடை எவ்வளவு காலம் வரை கடைப்பிடிக்க வேண்டுமென சிலர் வினவலாம். அதாவது, மாணவர்கள் தங்கள் கல்விப்பாதையில் எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமெனக் கருதுகிறார்களோ, அவ்வளவு தூரம் சென்று பயணத்தை முடிக்கும் வரையிலும் இந்த அரசியல் தடை, மாணவர்களின் மனமாகிய நகரத்தில் இருந்தேயாகவேண்டும். அதற்குப் பிறகு அரசியல் துறையில் இறங்கிப் பிறர் நலமே தன்னலமெனக் கருதி அக்கருத்தைச் செயலாற்ற நாட்டிலுள்ள சிறந்த ஒரு கட்சியில் சேர்ந்து பணியாற்றலாம். அப்போது யாதொரு தடையுமில்லை. அவ்வாறே நாட்டிற்குச் சேவை செய்வதுதான் கல்வி கற்பதன் முக்கிய நோக்கங்களிலொன்றாகும். ஆனால், நாட்டில் எந்தக் கட்சிகள் கூட்டம் நடத்தினாலும் எல்லாக் கூட்டங்களுக்கும் கூடுமான வரையில் செல்லவேண்டும். அங்கே கூட்டங்களில் கட்சிக்காரர்கள் சர்க்காரையோ, அல்லது தனிப்பட்ட பிறரையோ தாக்குவது போன்ற கட்டங்களையும் அவர்கள் கூறுகின்றவைகளில் மாணவர்களுக்குத் தேவையான உலக சம்பந்தமான செய்திகளையும், சரித்திர பூகோளப்பாடங்கள் சம்பந்தமான விஷயங்களையும், எப்படி நமது உடலில் ஜீரணமான சத்துள்ள உணவு சிறு குடலிலிருந்து இரத்தக் குழாய்களிலுள்ள இரத்தத்திற்கும், சத்தற்ற உணவுப்பொருள் பெருங் குடலுக்கும் தள்ளப்படுகின்றதோ, அதேபோலக் கூட்டங்களில் கட்சிக்காரர்கள் கூறும் மாணவர்களுக்கு உலக விஷயங்களைக் கொடுக்கும்படியான கருத்துக்களை மாணவர்கள் தங்கள் மனமாகிய அறிவுக் கோட்டைக்குள் வைத்துக் கொண்டு, அவர்கள் அங்கே கூறும் கட்சிக் கருத்துக்களை ஆராய்ந்து மனமாகிய அறிவுக் கோட்டையின் வாயிலிலே "பகுத்தறிவு" எனப்படும் காவலனால் அறிவுக்கோட்டைக்கு வெளியே தள்ளவேண்டும்.

முடிவுரை

மாணவர் சமுதாயம் என்றென்றும் சிறப்புற நிலைக்கவேண்டுமானால், மாணவர்கள் நம் இந்திய நாட்டுத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் கனவை நனவாக்க வேண்டுமானால், நம் பாரத நாடு மீண்டும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாகாமலிருக்க வேண்டுமானால், நம் நாடு கல்வியிலும், விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்க வேண்டுமானால், நம் நாட்டின் தூண்களாயுள்ள மாணவர்கள் கல்வியை ஐயந்திரிபறக் கற்று அக்கல்வியினாலடைந்த அறிவைக் கொண்டு கல்வியை முடித்தவுடன் அரசியல் துறையிலிறங்கி வருங்கால நாட்டில் வருங்காலத் தலைவர்களாகத் திகழ்ந்து வருங்கால மக்களுக்கு மிகுந்த நன்மை செய்வார்களாக.

R. K. சுப்ரமணியன்
(இரண்டாம் வகுப்பு.)

தமிழர் நிலை—அன்றும் இன்றும்

பண்டைத் தமிழரின் மாண்புறு செயல்களையும், ஆண்மையினையும், அறிவையும், ஆற்றலையும், அரசாட்சித் திறத்தையும், நாகரிகத்தையும் தமிழ் நூல்களின் மூலம் அறியும் காலத்து நம்மையறியாமலேயே நம்முள்ளே **ஆணவம்** (நாமும் தமிழன் என்பதுவே) தலைதூக்கி ஆடுகின்றது. மேலை நாட்டார் தீ மூட்டி உணவைப் பக்குவம் செய்யும் காலத்திலேயே, தமிழர், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் எழில்மிகு இயற்கைக் கோடுகளுக்கு ஏற்ப, தங்கள் வாழ்க்கைகளைப் பகுத்துக்கொண்டு வாழ்வு நடாத்திவந்தனர். என்னே இவர்கள் முன்னேற்றம்!

பண்டைய தமிழரின் ஆட்சி மூவேந்தரின் கண்காணிப்பின் கீழ், திறம்பட நடந்தது. மாந்தர் அமைதியாக அரும்பணிகள் ஆற்றி இன்பமாகத் தங்கள் குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழ்வு நடாத்தினர். பண்டைய தமிழ்ச் சங்கம் தமிழினையும் தமிழரையும் போற்றி வளர்த்தது. தமிழையும் அதன் முக்கலையும் தன் கண்ணின் இமைகளுக்குள் வைத்து மூடிப் பாதுகாத்தது. புலவர்கள் பலர் இச் சங்கத்தின் மூலம் அரிய பெரிய தொண்டாற்றினர். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ற பாரதியாரின் கவியின் மூலம் போற்றப்பட்ட மொழி ஆட்சி பீடத்திலே ஏறி ஆணவத்தோடு ஆட்சி செலுத்திற்று. அன்றைய தமிழர் வேற்றுமையின்றி ஒற்றுமைகொண்டு தமிழினை அவாவிக் கற்றனர். ஆனால், இன்று பாராண்ட தமிழன் பதுங்குகிறான். ஆவின் கன்றுக்காகத் தன் மைந்தன் உயிரினையே பணயம் வைத்த மனுநீதிச் சோழன் மரபில் வந்த மாண்பெறு தமிழன், இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என வாய் கூசாது வழங்குகிறான். என்னே இவன் நெஞ்சு உரம்! உடம்பிலே ஊற்றுப் பெருக்கு எடுத்தோடுவது வீரத் தாயின் குருதிதானா? இதை எண்ணும் தோறும் என் நெஞ்சு பிளக்கிறது. உடல் குன்றுகிறது. உயிர் ஓடிவிடத் துடிக்கின்றது.

அன்று தமிழர் வீரத்திலும், வாணிபத்திலும், கலையிலும் சிறந்து விளங்கினர். இவர்கள் கலையின் திறனை வியக்காத அன்னியர் இல்லை. மேலை நாடுகள் முழுவதும் கப்பல்கள் விட்டுக் கடல் கடந்து வாணிபம் செய்தனர் தமிழர். ஆனால் இன்று அன்னிய நாட்டாரின் உணவுக் கப்பல் என்று சென்னைத் துறைமுகத்தை யடையும் என்று செய்தித்தாளில் வரும் செய்தியை எதிர் நோக்குகின்றனர். தமிழர் எல்லாக் கலைகளிலும் தலைசிறந்து நின்றனர். மாமல்லபுரம், தஞ்சை, காஞ்சிபுரம், அஜாந்தா முதலியவற்றின்கண் உள்ள ஓவியங்களும், சித்திரங்களும், சிற்பங்களும் அவற்றுக்கு எடுத்துக்காட்டு. ஆனால் இன்று மேலை நாட்டுச் சாயல் இல்லாக் கலைப் பொருள்கள் கண் காட்சிக்கு உகந்தன அல்ல எனக் கருதப்படும் இழிநிலை ஏற்பட்டுள்ளது!

இதுமட்டுமா! வீரத்தைத்தான் எடுத்துக் கொள்வோம்! அன்றைய தமிழகத்திலே வீர இலக்குமி மகிழ்ந்து தவழ்ந்து விளையாடினாள். இன்று தவ்வை (மூதேவி) துள்ளித் திரிகின்றாள். அந்நாளில் தோன்

றிய தாய்மார் தமது மைந்தர்களுக்கு வீரம் ஊட்டினர். தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் கூறக்கேட்டு அவனை ஈன்றபோதிலும் பெருவகையடைந்தாள் அத் தாயார். காவற் பெண்டு என்னும் பெண்பாற் புலவர் :—

“சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே ;
தோன்றுவன் மாதோ போர்க்களத்
தானே”

எனப் பகர்ந்துள்ளாள். வீர மக்களைப் பெறுவதில் பண்டைய பெண்டிர் அடையும் ஆனந்தமும் ஆணவமும் இதன் மூலம் நன்கு விளங்கும். ஆனால், இன்றைய பெண்டிர், ‘தம்பி! பூச்சாண்டியிடம் உன்னைப் பிடித்துத் தந்துவிடுவேன்’! என்றோ அல்லது நாய், கழுதை முதலியவற்றின் இனிய குரலை உவமையாகக் காட்டியோ, குழவிக்குள்ள உண்மை வீரத்தை வேரு டன் கல்லியெறிந்து விடுகின்றனர். அவற் றின் இயற்கையான ஆண்மையை இன்றைய தாய்மார்கள் அடிமைப்படுத்திவிடுகின்றனர். தொட்டில் பழக்கம் சுடுகாட்டு மட்டும் என்பது பழமொழி அன்றோ; இதன் விளைவாகத்தான் “போர்” என்று கூறிய பொழுது பொதிய மலைக்குப்பின் ஓடிவிடு கிறேன் என்கிறான். கற்பிற்கு ஓர் எடுத்துக் காட்டு கண்ணகி என்னும் மடந்தை. அவளைப் போற்றிப் புகழாத காவியமும், மனிதரும் இல்லை எனலாம். ‘கள் அவிழ் கோதை’ என்று அன்று பெண்ணைப் புலவர் கள் ஏட்டிலே தீட்டினர். இன்று கூந்தல் படும்பாடு யாவரும் அறிந்ததே. மேலை நாட்டு நாகரிகத்திலே ஊறித் திளைத்துப் பெண்மைக்கே உரிய அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு என்னும் குணங்களை நீத்த நெஞ்சு உரம் படைத்த சில மங்கையர் உள்ளனர்.

அன்றைய அரசாட்சியிலே நீதி நேர்மை யின் வாயிலில் நின்று ஆட்சி புரிந்தது. அன்று கோயில் ஒரு புனிதமான இடமாகப் போற்றப்பட்டது ; கருதப்பட்டது ; நாயன் மார்களால் ஏட்டிலே தீட்டப்பட்டது. ஆனால், இன்று ஒரு சில கொடியவர்களின் கூடாரமாக விளங்குகின்றது. என் மேல் கோபம் அடையாதிர்கள் ; உணவின்றி, உடையின்றி, உறக்கமின்றித் துணியின்றி, உடலிலே சக்தியின்றி, கண்ணிலே ஒளி யின்றி, செயல் ஆற்றிப் பொருள் சேர்க்க வழியின்றிப் பிச்சையெடுக்கக் கோயிலின் அமர்ந்துள்ளான் ஒரு மனிதன். அவனைக் கண்டும் காணாததுபோலக் கடவுளுக்கு அர்ச்சனை செய்யச் செல்லுகின்றான். யாவ ரும் இன்புற்றிருக்க வேண்டுவதல்லால், வேறொன்றும் வேண்டேன்! பராபரமே! என்ற மரபில் உதித்தவனா இன்றைய தமிழன் ? மாறட்டும் இப்படிப்பட்ட தமிழ கம். காந்தி காட்டிய பாதையில், பாரதி கண்ட கனவுகளை, நேரிய முறையில், சீரிய வழியில், புதுமை உள்ளம் கொண்ட இளைஞர்களாகிய நாம் ஒரு புதிய தமிழ கத்தைப் பண்டைய தமிழகத்தின் அடிப் படையிலே உருவாக்குவோம் ;

வாழ்க தமிழகம்! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழர்!

கே. வி. சாரங்கபாணி
(இரண்டாம் வகுப்பு)



CONNEMARA PUBLIC LIBRARY
23 AUG 1955
MADRAS

உணவு பெருக்குவோம்

உணவு பெருக்குவோம்—நாடு
உயர் ஆக்குவோம்
மணமும் வீசிட—நல்
மாண்பும்பெற்றிட
கணமும் வீணின்றி—எங்கும்
கடிதில் உழைத்துமே
தணலான நிலத்தினில்—எங்கும்
தண்ணீர் ஊற்றியே
பேதங்கள் நீக்கியே—வீண்
பேச்சுக்கள் நீக்கியே
சேதங்கள் நீக்கியே—இனிச்
சேர்ந்து வாழ்வோமே
மக்கள் மகிழ்ந்திட—அரசு
மாண்பில் சிறந்திட
தக்க பணியாகும்—உணவு
தரும் உழைப்பிதே!

கே. வி. சாரங்கபாணி
(இரண்டாம் வகுப்பு)

வெண்மதி வருகை

1. வெண்மதி வரவிற் காக
வெகுவாகக் காத்தி ருந்தேன்
தண்மதி தோன்றக் கண்டு
தன்னிலை மறந்து நின்றேன்
விண்ணிடை வரவுங் கண்டேன்
வீதியிற் பவனி போல
மண்ணிடை என்ன கத்தே
மகிழ்ச்சியும் பொங்கக் கண்டேன்.

2. தனிமையே நல்ல தென்றுள்
தன்னிலை செப்பு தற்குக்
கனிமொழி நங்கைசொல்லைக்
கனியுடன் பெற்றுக் கொண்டு
இனிமையாய் வந்து நின்றேன்
இன்னமும் வந்தா ளில்லை
வனிதையின் வரவிற் காக
வாடினேன் தனிமைதன்னில்

3. அன்பினள் வந்து நின்றாள்
அவனிமீ தூர்ந்து வந்தே
இன்சொல் தன்னு லெந்தன்
இதயத்தை பகிர்ந்து கொண்டாள்
இன்பத்தின் எல்லை யில்யாம்
இருந்து தான்வந்திடவே
என்றுமே எங்களோடே
இருப்பா யோசொல்மதியே.

அ. அக்கையா
(இரண்டாம் வகுப்பு)

அபாக்யவதி

விடியற்காலை சுமார் ஐந்து மணியிருக்கும். லக்ஷ்மி சடாரென்று எழுந்து கண்களைக் கசக்கிக் கொண்டு அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். வைகாசி மாதமாதலால் அதற்குள் நல்ல வெளிச்சமாயிருந்தது. மூலையில் ஓர் அடுப்பும் நான்கைந்து பாத்திரங்களும் கிடந்தன. சிறிது தள்ளி ஓர் உடைந்த மரப்பெட்டி இருந்தது. அதன் அருகில், ஒரு கிழிந்த பாயில் இரு குழந்தைகள் ஒன்றையொன்று அணைத்தவாறு தூங்கிக் கொண்டிருந்தன. இவைதாம் அவளுக்கு எஞ்சி யிருந்த பொக்கிஷங்கள்.

முன் தினம் கடன் வாங்கி வந்திருந்த ஆழாக்கரிசியும் ஆகிவிட்டது. மளிகைக் கடைச் செட்டியார் கடனுக ஒரு துரும்பு கூடக் கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டார். வேலை செய்யுமிடத்திலும் இன்னும் ஒரு வாரம் கழித்துத்தான் பணம் கிடைக்கும். ஆனால், அது வரை காலம் தள்ள வேண்டுமே. குழந்தைகள் ஒன்றுமில்லாமல் தவிக்குமே; ஈ ... சு...வரா, ஏன் இப்படி என்னை வருத்துகிறாய்? என்று அழுதனள்.

லக்ஷ்மி தன் வருத்தம் தீர, சிறிதுநேரம் விம்மி விம்மி அழுதாள். பிறகு எழுந்து பெட்டியைத் திறந்து அதைக் கிளறி அடியிலிருந்து ஒரு பொருளை எடுத்தாள். அது ஓர் அழகிய கடியாரம், சங்கிலியுடன் கோத்து, சட்டைப் பையில் போட்டுக் கொள்வது. இறந்துபோன அவள் கணவன் மிகுந்த ஜாக்கிரதையுடனும், பிரியத்துடனும் உபயோகப்படுத்தியது. அவளும் மற்றப் பொருள்கள் அனைத்தையும் இழந்த போதிலும், இதை மட்டும் அரும்பாடு பட்டுக் காப்பாற்றி வந்தாள். ஆனால் அவளுக்கு அன்று இதை விட்டால் வேறு வழியில்லை போலிருக்கிறது?

கடியாரத்தைப் புடவைத் தலைப்பில் சுற்றி, இடுப்பில் சொருகிக்கொண்டு அறை வெளியே வந்தாள் லக்ஷ்மி. யோசித்த வண்ணமே கதவையிழுத்துத் தாளிட்டுத் தன் விதியை நொந்த வண்ணமே ஊர்ப் பக்கம் நோக்கி விரைந்து நடக்கலானாள்.

சில வருடங்களுக்கு முன், லக்ஷ்மியைப் போன்ற மனச் சந்துஷ்டி யுள்ளவர்கள் யாருமே இருந்திருக்கமாட்டார்களென்று தைரியமாகச் சொல்லலாம். தாயுந் தகப்பனும் மற்று, அனாதையாக நின்ற அவளை, ஹரிஹரன் மணந்து கொண்டபொழுது தன்னைப்போன்ற பாக்கியசாலிகளும் இருப்பரோவென்று ஆனந்தித்தாள். தங்க விக்கிரகங்கள் போன்று இரண்டு குழந்தைகளும் பிறந்தன. ஒரு குறை மட்டும் அவளுக்கு இருந்திருக்குமேயானால், அது தன்னைப் போலத் தன் கணவனும் உறவினர் என்று சொல்லிக்கொள்ளக்கூட ஒருவரையும் படைத்திருக்கவில்லையே என்பதுதான்.

இந்த ஆனந்த நிலை வெகு நாள் நீடித்திருக்கவில்லை. ஆபீஸிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த ஹரிஹரன் ஒரு லாரியடியில் சிக்கிக்கொண்டான். அத்துடன் அதிக நேரம் தங்கியிராமல் இவ்வுலகில் தன்னைப்படைத்த இறைவனிடம் போய்ச் சேர்ந்தான்.

உலகமே இருண்டது போன்ற பிரமையுடன் திகைத்து நின்றாள் லக்ஷ்மி. இம்மாதிரி தன் வாழ்வினில் இடி விழக்கூடும் என்று கனவிலும் எதிர் பாராத அவள்,

அழுவதற்கும் சக்தியற்றுப் பிரமித்திருந்தாள். ஆயினும் விரைவினிலேயே தன் ஆதரவற்ற நிலையை உணர்ந்து மேற்கொண்டு நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்கலானாள். ஹரிஹரன் பேரில் பாங்கியில் ஐம்பது ரூபாய் இருந்தது. அவன் வேலை செய்து கொண்டிருந்த கம்பெனியார் கருணை மிகுந்து கொடுத்த இரண்டு மாத சம்பளம், மேலும் அதிகப்படியாக விருந்த சாமான்களை விற்ற பணமும், ஆக ரொக்கமாக ஐந்நூறு ரூபாயுடனும், சில சாமான்களுடனும், தன் இரு குழந்தைகளுடன் ஊருக்கு வெளியிலிருந்த ஒரு சிறு வீட்டின் பகுதியில் குடி புகுந்தாள். குழந்தைகள் மிகவும் சின்னவர்களாதலால் அவர்களை விட்டு விட்டு முழு நேரம் எங்கும் வேலை செய்ய முடியாத காரணத்தால் சில சில்லரை வேலைகளை மட்டும் செய்து கொண்டு, தன் வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

இரண்டு வருடங்கள் சென்றன. இதற்குள் லக்ஷ்மியின் நிலை மிகவும் க்ஷீணித்திருந்தது. கையிலிருந்த பணம், வீட்டிலிருந்த சாமான்கள் அநேகமாக எல்லாம் கைமாறியிருந்தன. ஒவ்வொரு நாள் கழிவதும் சிரமமாயிருந்தது. இந்தச் சங்கட நிலையில் தான் தன் கணவன் கடியாரத்தை விற்கத் துணிந்தாள்.

முதலியாரின் வீட்டை நெருங்கநெருங்க லக்ஷ்மிக்கு நெஞ்சு படபடக்க வாரம்பித்தது. பாவம், அவர் எத்தனையோ தடவை அந்தக் கடியாரத்திற்கு நல்ல விலை கொடுப்பதாக முன் வந்தபொழுதெல்லாம் கூறி வந்தார். அப்போது அவள் அதை விற்பதற்குக் கண்டிப்பாக மறுத்துவிட்டாள். ஆனால், இன்று தானே ஊர் விடிவதற்குள் அவரைத் தேடிக் கொண்டல்லவா செல்ல நேர்ந்திருந்தது.

முதலியார் வீட்டுக் கதவை மெதுவாகத் தட்டினாள் லக்ஷ்மி. உள்ளே எல்லோரும் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தபடியால், உடனே பதில் வரவில்லை. இன்னொரு முறை தட்டிவிட்டுக் கீழே குனிந்தாள். ஆ, அதென்ன? ஏதோ காசு போலல்லவா தெரிகிறது! இரவு யாராவது தவற விட்டிருப்பார்கள். சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து யாருமில்லை யென்று நிச்சயம் செய்துகொண்டபின், அதனைக் குனிந்தெடுத்தாள். அது எட்டணா நாணயம். ஆண்டவனே! தருணத்தில் உதவினாயே! உன்னை எவ்வாறு கொண்டாடுவேன்?

இதுவரை அநுபவித்திரா ஆனந்தத்துடன் வீடு திரும்பினாள். தன் உயிருக்குயிரான கடியாரம் தன்னிடமேயிருக்கும். இந்த எட்டணாவை வைத்துக்கொண்டு நான் கைந்து தினங்கள் காலந் தள்ளிவிடலாம். பிறகு நாம் சமாளித்துவிடலாம். வீட்டுக்குப் போனதும் முதற்காரியமாக, காலணாவிற்குப் பிள்ளையாருக்குக் கற்பூரம் கொளுத்தவேண்டும், என்றெல்லாம் எண்ணங்கொண்டாள்.

வேகமாக வந்துகொண்டிருந்த லக்ஷ்மியின் நடை தெருவில் கூடியிருந்த பெரிய கூட்டத்தைக் கண்டதும் தடைப்பட்டது. சாதாரண காலத்தில் அந்த மாதிரி கூட்டங்களில் அவள் நுழைவதில்லை. அங்குக் கண்டதென்ன? ஒரு கிழ ரிக்ஷாக்காரன் மோட்டார் லாரியினால் மோதப்பட்டு ரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தான். ஒரு க்ஷணமும் தாங்கமுடியாத வேதனை லக்ஷ்மிக்கு உண்டாயிற்று. ஆம், அதே நிலையில்தான் அவள் கணவனும் கிடந்திருப்பான். ஐயோ என்ன பயங்கரம்!

தன் தலையை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு கூட்டத்திலிருந்து வெளியே

வந்தாள் லக்ஷ்மி. உடனே குழந்தைகள் ஞாபகம் அவளுக்கு வந்தது.

ஓட்டமும், நடையுமாகவந்து பூட்டைத் திறந்து வீட்டினுள் நுழைந்தாள். குழந்தைகள் அதற்குள் எழுந்து, அம்மாவைக் காணுதபடியால் வீறிட்டு அழுதுகொண்டிருந்தன. வேண்டாம் கண்களா, அழாதேங்கோ. நம்ப கஷ்டமெல்லாம் நீங்கிவிட்டது. இதோ இன்னிக்கு ஒரு எட்டணு கிடைத்தது. நம்ப கடியாரம் எங்கேயும் போகாது. நம்பகிட்டயே இருக்கும்.....

..........நம்ப கிட்டயே இருக்கும்........

ஆ, இதென்ன? கடியாரத்தை முடிந்திருந்த அவள் தலைப்பு கத்தரிக்கப்பட்டுத் தொங்கியது.

ஜே. வேங்கடராமன்
(முதல் வகுப்பு)

தங்கைக் கெழுதிய கடிதம்

அன்புடைத் தங்கை லோகுவிற்கு,

நாளும் உன் நலமுறும் வாழ்வையே நாடி நிற்கும் பாலன் எழுதுகிறேன். நலம். நலமறிய அவா. கல்வியறிவு பெறுவான் கல்லூரியை நாடி இருக்கிறேன். இங்கிலேயில், உன் அறிவு சான்ற கடிதங்கள் பலப்பட என் உள்ளத்தில் அனுபவ ஒளியேற்றும் நிலைகண்டு அகமகிழ்கிறேன். இத்தகைய கடிதங்களை நீ எனக்கு எழுதியமை குறித்து நன்றி பாராட்டுகிறேன். நிற்க.

'நாட்டின் நாற்புறங்களிலிருந்தும் ஏழ்மையின் குரல்கள் எழும்பிக்கொண்டே இருக்கின்றனவே, இவற்றிற்கு ஒரு முடிவே கிடையாதா?' என்று சென்ற திருமுகத்திலே தீட்டியிருந்தாய். அறியாமை சூழ்ந்த மக்களிடையே அறிவுவொளி வீசச்செய்ய, ஏழ்மையுற்ற மக்களிடையே எழுச்சிகாண, வறுமையுற்ற மக்களிடையே வளப்பங்காண, ஆர்வமுற்ற நிலைகண்டு பாராட்டுகிறேன். ஆனுல், குமுறுகின்ற எரிமலையைக் குடம் தண்ணீர் கொண்டு அணைத்துவிட முடியாதே.

ஏழ்மையின் குரல்கள் பலப்பல திசைகளிலிருந்து பலப்பல முறைகளிலே எழும்பிக் கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு முறையிலே சீர்திருத்தம் தேவைப்பட்டால் சீக்கிரம் செய்து முடித்துவிட முடியும். நம்முடைய நாடுதான் நாலாவிதமான முறைகளிலும் பின்னடைந்த நிலையிலே இருக்கிறதே. கல்வி முறையிலே, தொழில் முறையிலே, வியவசாய முறையிலே, பொருளாதாரத்திலே, மற்றும் எல்லாவற்றிலுமே நாம் பின்னடைந்துதானிருக்கிறேம். சுருக்கமாகச் சொல்லப் போனுல், அரசாங்கம் ஏழ்மை என்னும் அடிப்படையின் மேல், கல்வி முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, வியவசாய முன்னேற்றம், பொருளாதார அபிவிருத்தி என்பன போன்ற பலப்பல அடுக்குகளைக் கொண்ட கட்டடத்தை உருவாக்குகிறது. அடிப்படையே ஆட்டங் கண்டதானுல், அதற்குமேல் கட்டப்பட்ட கட்டடமென்ன கருங்கற் பாறை போலா இருக்கும்? உன் சிந்தனையைச் சிறிது பின்னேக்கிச் செலுத்து. இந்த நாட்டு

ஏழ்மையின் குரல்கள் எவ்வாறு உருவாயின என்பது தெரியும்.

புனல்பாய்ந்து பொன் கொழித்த நாட்டிலே தான் மனிதன் புழுவாகத் துடிக்கிறான். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடிதான் இன்று முதுமையின் நிலையெய்தி முடங்கிக்கிடக் கிறது. பருத்தி, பட்டு, கம்பளி முதலிய ஆடைகளைப் பாரெங்கும் அனுப்பிய நாடு தான் இன்று எண்ணிறந்த நெசவாளர்களை மனைவி மக்களுடன் வீடுதோறும் இரந் துண்டு வீதியிலே தூங்கவைத்திருக்கிறது. நீர்வளமும் நிலவளமும் மிகுந்து செந்நெல் லைக் கன்னல்போல வளரச்செய்த கவின் பெறு நாடுதான், வான்மழை பிழைத்து, வளம் குன்றிப்போய், அதனால், வாழ்விழந்த நிலையிலே பல்லாயிரக்கணக்கான பாண்டிய நாட்டு மக்களைப் பரதவிக்க விட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மக்களைத்தான் குறிப்பிடுகிறேன். இவை மட்டுமா, வந்தவர்க் கெல்லாம் வாழ்வளித்த இந்த வண்டமிழ் நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்குச் சென்று ரப்பர் தோட்டங் களிலும், ஆலைகளிலும் அல்லும் பகலும் அரும்பாடு பட்டனரே, இந் நாட்டு மன்னர் கள். அவர்களெல்லாம் அகதிகளாகத் தம் தாய் நாட்டை அடைந்தனர். "அம்மியே ஆகாயத்தில் பறக்கும் போது இலவம் பஞ்சு எந்த மூலை?" என்ற கூற்றுக் கேற்ப, படித்த வனே இங்குப் பதவி கிடைக்காமல் பரத விக்கிறான். இந் நிலையில் பாட்டாளி என்ன செய்ய முடியும்? உழைத்து ஊதியம் பெற்று வாழ்ந்தவன் அவன். இங்கு உழைக்க இடமில்லை. ஊதாரியாக மாறி னான். ஆனால், அந்நிலையில் பிழைக்க வழி யில்லை. பிச்சைக்காரனானான்.

ஆட்சி முறையின் அவல நிலையால் நெச வாளர்கள் பிச்சைக்காரர்களாயினர். இயற்கை செய்த மோசடியால் இராமநாதபுரத்து மக்கள் பிச்சைக்காரர்களானார்கள். ஆதர வற்ற நிலையிலே அகதிகள் பிச்சைக்காரர் களாக மாறினர். இவர்களோடு உழைக்கும் வலுவற்ற உருக்குலைந்த மக்களும் சேர்ந்து கொண்டனர். இதுதான் லோகு, இந்த நாட்டிலே ஏழ்மையின் குரல்கள் எதி ரொலித்த வரலாறு.

ஐயோ! நினைத்தாலே நெஞ்சம் கலங்கு கிறது. தான் பெற்ற செல்வத்தைப் பாலூட் டிச் சீராட்டிப் பள்ளியிலே படிக்கவைத்துப் பதவியிலே அமரச் செய்து படாடோபமாக வாழலாம் என்று கருதியிருப்பாள் தாய். ஆனால், நாட்டின் நடை முறையே அவள் எண்ணத்தில் மண்ணைக் கொட்டிவிட்டது. புத்தகங்களை எடுத்துக்கொடுத்துப் பள்ளிக் குச் சென்றுவாடா என்று பரிவோடு அனுப்பவேண்டிய தாய், உடைந்து கிடக்கும் ஓடுகளிலொன்றை எடுத்துக் கொடுத்துப் 'பிச்சை எடுத்துவாடா' என்று அனுப்பு கிறாள். இமயத்திலே புலிக்கொடி நாட்டிய தமிழரது வீரமிக்க வரலாறுகளையும், வலிமை மிக்க ஓர் ஏகாதிபத்யத்தையோ எதிர்த்துத் தனியே மரக்கலம் செலுத்திய மறத் தமிழன் வ. ஊ. சிதம்பரத்தின் வாழ்க்கை வரலாறுகளையும் கதை, கதை யாகச் சொல்லி ஆசையுடனே அமுதூட்ட வேண்டிய தாய் எவ்வாறு கதறிக் கதறிப் பிச்சை எடுப்பது என்பதைக் கூறி இப்படி வயிற்றிலே அடித்துக்கொண்டு அழுதால் தான் அவர்களுக்கு இரக்கம் தோன்றும் என்றும் கூறி வயிற்றிலே அடித்துக் காட்டு கிறாள். எவ்வளவு கொடுமை! 'பசி வந்தால் பத்தும் பறந்துபோம்,' என்பார்களே, அதற்கேற்ப, மகனிடத்துக் கொண்டிருந்த பாசத்தையும் பறக்கடித்து விடுகிறாள் தாய். லோகு! இந் நாட்டு மன்னர்களின் வரலாற்று ஏடுகளிவை. பிச்சைக்காரர்கள் மாத்திரம் தான் இந்த நாட்டிலே ஏழ்மையின் குரல்

களை எழுப்புகிறார்கள் என்று கருதிவிடாதே. இந்த நாட்டிலே வாழும் எண்ணிறந்த மக்கள் பணமில்லையே என்றுதான் ஏங்குகிறார்கள். பலர் இல்லை என்று கூறி ஏமாற்றியும் வருகிறார்கள்.

இந்த நாட்டிலே இருந்த வளப்பங்களெல்லாம் வறண்டுபோய்ப் பாலைவனமாகவா ஆகிவிட்டது நம் நாடு? இல்லையே. பின் ஏன் இந்த வறுமைக் கொடுமை? பல நூற்றுக் கணக்கான ஏக்கரா நிலங்களை ஒருவன் அடைத்து வைத்துக் கொள்கிறான். அதனால் மாவிற்குப் பத்து கலம் விளையுமென்றால் நான்கு, ஐந்து கலங்கள் விளைந்தாலே செலவிற்குப் பணம் கிடைத்துவிடுகிறது. அதனால், அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. வைகறைக்கு முன்பு வயலுக்குச் சென்று உழைத்து, ஆதவன் மறைந்த பிறகு அவ்விடத்தை விட்டு அகலுவான். அங்கிருந்து பண்ணையை அணுகி 'ஐயா, பட்டினி கிடக்கிறேன். படி நெல் கொடுங்கள்' என்பான். 'படி முறைக்கு இன்னும் இரண்டு நாட்களிருக்கின்றனவே, இப்பொழுது என்ன? போடா' எனறு துரத்துவான் முதலாளி. என்னுடைய கற்பனை என்று கருதிவிடாதே, லோகு, நேரிலேயே கண்டிருக்கிறேன். அநேக இடங்களிலே பல முதலாளிகளிடத்துக் கூறியுமிருக்கிறேன். யாரும் என் பேச்சிற்குச் செவி சாய்க்கவே இல்லை. அவ்வாறு பட்டினி கிடப்பவன் பாடுபடுவது எங்ஙனம்? நாடு வளமுறுவதும் எவ்வாறு முடியும்? மேடைகளிலே ஏறி ஆடம்பரமாகப் பேசுவார்கள். 'நம் நாட்டின் நரம்புகள் உழவர்கள்; அவர்கள் நலத்தை நாம் நாடுதல் வேண்டுமென்று.' அதே முதலாளி தன் கழனிகளிலே உழைப்பவன் பட்டினி கிடந்து சாவான், பார்த்து இரங்கமாட்டான். இந்த நிலையிலே நம் நாட்டு மக்களிடையே சொல்லுக்கும், செயலுக்குமுள்ள மாறுபாட்டைப் பார்த்தாயா?

இந்த நேரத்திலே இங்கிலாந்தின் நிகழ்ச்சி ஒன்று என் நினைவிற்கு வருகிறது. மக்கள் மன்றத்திலே ஆண்டவனது அமர நிலையைப் பற்றிப் போதித்த போப்பாண்டவன் தனிமையிலே பாப மன்னிப்புச் சீட்டைப் பணத்துக்கு விற்றான். அவனது பொய்ப் புரட்டுக்களை மார்டின் லூதர் மக்கள் மன்றத்திற் கிழுத்துவந்து மதத்தின் பேரிலே மக்களை மடமையிலே ஆழ்த்திய நிலைகளையெல்லாம் அம்பலப்படுத்தினான். பிராட்டஸ்டண்டு உருவாகியது. போப்பின் புகழ் மங்கியது. அந்த மார்டின் லூதர் போலப் பலப் பல மார்டின் லூதர்கள் நம் நாட்டிலே தோன்ற வேண்டும். தோன்றினால் மட்டும் போதாது. பகுத்தறிவு போதனையால் புரையோடிய சமுதாயத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். அதற்கு ஆதாரமான கல்வி இந்த நாட்டிலே பரவவேண்டும். மனிதன் தன் சிந்தனையால் சிறந்ததேது? சீரழிந்ததேது? என்ற கருத்துக்களைப் பகுத்தறியும் திறன் அடைதல் வேண்டும். அந்தக் கல்வியின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக்கூறத் திறனுடைய பேச்சாளர்கள் தேவை. இல்லையேல், பணக்காரனின் இரும்பு நெஞ்சம் இரக்கமுடையதாக மாறி, சேமித்து வைத்திருக்கும் பல கோடி ரூபாய்களைப் பாங்கிலிருந்து எடுத்து ஆலைகள் நிறுவி ஆதரவற்றவர்களுக்கு அனுதைகளுக்கு வேலை கொடுதது்க் காக்க வேண்டும். செல்வர்களின் மேடைப் பேச்சு, அவர்களது சிந்தனைக்கு வேலை கொடுத்து நாட்டின் நலனுக்குப் பாடுபடும் நல்லவர்களாக ஆக்கவேண்டும். அப்பொழுதுதான் 'பாரத மாதா பரிபூர்ண சுதந்திரம் எய்தினாள்' என்ற பாட்டுகள் பாடப்படுதல் வேண்டும். ஏழ்மையுற்ற நாட்டைப்பற்றி இலட்சியப் பூங்கா என்றால், அதைப் பார்த்து விட்டுச்

சென்ற அயலான் நம்மைப் பரிகசிக்கமாட்டானு? நாட்டிலே நல்லறிவு பெருகி, மக்களிடையே சகோதர மனப்பான்மை நிலவினுலொழிய நாடு சிறப்புருது; நாமும் மேன்மையுற மாட்டோம். ஆதலின், இந் நாட்டின் ஒவ்வொருவனும் உன்னைப்போன்று ஒரு முன்னேற்றக் கருத்து வாய்ந்தவனுக, சொல்லிற்கும் செயலுக்கும் தொடர்புள்ளவனுகி, வாழ்தல் அவசியம். ஏன், நீயும் கிராமத்திலேதானே இருக்கிருய். ஒதுக்கப்பட்ட மக்களிடையே கல்வியின் அவசியத்தைப்பற்றிக் கதை போலச் சொல்லிவா. உன்னைப் போன்று ஓராயிரம் லோகுகள் இந்த நாட்டிலே உருவானுல் 'எங்கள் நாட்டுக்கெந்த நாடு ஈடு?' என்ற பாட்டு மாறி 'இந்திய நாட்டிற்கெந்த நாடு ஈடு?' என்ற மாற்றுரின் பண் விண்ணைப் பிளக்கும்.

வணக்கம்.

புதிய கல்லூரி,
சென்னை 14, 23-1-'53.

அன்புள்ள,
பாலன்
(முதல் வகுப்பு)

விகடத் துணுக்குகள்

1. ஒருவர் :— ஓய் ராமமூர்த்தி ! உம்முடைய நாய் என் காலைக் கடித்துவிட்டதே.

ராமமூர்த்தி:—வேடிக்கையாகப் பேசுகிறீர்களே ! இவ்வளவு சிறிய நாய் காலைக் கடிக்காது கழுத்தையா கடிக்கும் ?

* * *

2. உபாத்தியாயர் :— சோமு ! நீ சரியாக இல்லாவிட்டால், உனது தந்தையை என்னைவந்து பார்த்துவிட்டுப் போகச் சொல்வேன்.

டாக்டர் மகன் :— உங்களுக்குத்தான் பண நஷ்டம். அவர் ஒரு தடவை உங்களை வந்து பார்த்தால், பத்து ரூபாய் வசூலித்துவிடுவார்.

* * *

3. யஜமானி :— நான் அதிகமாகப் பேசும் வழக்கம் இல்லை. நான் கைவிரலை ஆட்டினுல், "வா" என்பது அர்த்தம்.

புதிய வேலைக்காரி :— தெரியாமலென்ன? நானும் அதிகமாகப்பேசுவதில்லை. நான் தலையை ஆட்டினுல், "வரமாட்டேன்" என்பது அர்த்தம்.

* * *

4. "அடே சப்பா! ரயில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றதே, நீயும் எதற்காக வண்டிக்குள்ளே ஓடுகின்றுய்?"

"காலையில் 8-00 மணிக்குக் கலியாணம். வண்டி 8-30 மணிக்குத்தான் போகும்."

"அதற்காக ?"

"நானும் ஓடிக்கொண்டிருந்தால் வண்டி வேகம் அதிகமாகாதா?"

* * *

5. பொன்னன் :— ஐயா ! அரை ரூபாய்க்கு ஒரு "சேர்" டிக்கட் தாருங்க.

டிராமாக்காரன்:— ஐயா, இங்குச் சேர், விசை ஒன்றும் கிடையாது.

பொன்னன் :— இல்லை ஐயா ! அது தான் நாற்காலி டிக்கட்.

டிராமாக்காரன் :— அந்த டிக்கட் ஒரு ரூபாய்.

பொன்னன் :— எனக்குக் கண்தெரியாது. பாட்டை மட்டும்தான் கேட்கப் போகிறேன், ஆகையால் அரை சேர் டிக்கட்டு போதுங்க.

S. வெங்கடராமன்
(முதல் வகுப்பு)

தாயும் சேயும்

அம்மா! அழாதேம்மா-வளமான தொட்டிலிலே இரு பக்கம் கடல்கள் தாலாட்டத் தென்றல் இன்னிசை கூட்ட, இத்தனை வளம் நின்னிடம் இருக்கும் பொழுது ஏனம்மா அழுகிறாய்? அம்மா! நீ பெற்ற செல்வங்கள் சோற்றுப் பிண்டங்களல்லவே. வீரத்தின் சின்னமாக வெற்றியின் நிலைக்களனாக வெஞ்சமரில் விளையாடிய வெற்றிச் செல்வங்கள் தாமே யம்மா, நின் சிறார்கள். ஏனம்மா அழுகிறாய்! அழாதேயம்மா! அழாதே - என் உள்ளம் வெடித்துவிடும் நீ அழுதால். அழாதேயம்மா, அழாதே!

அம்மா நின்னிடம் எது இல்லை சொல் - உனக்கு என்ன குறை அழ? சொல்லம்மா சொல். உன்னிடம் வளமான வயல்கள் இல்லையா - வற்றாத நதிகள் இல்லையா - கடலில் லை யா - கனியில்லையா - முத்தில்லையா பவளமில்லையா - தென்றலின் சு க ந் த மி ல் லையா? அல்லது அம்புலியின் குளிர் நிலவில்லையா? என்னம்மா உன்னிடம் இல்லை? ஏனம்மா அழுகிறாய்?

ஆதி மொழி யில்லை யென்றா - இலக்கியம் இல்லை யென்றா அல்லது நாகரிகம் இல்லை யென்றா?

அம்மா! தொன்மைக்கும் இனிமைக்கும் இன்பத்திற்கும் நிலைக் களனாக இருப்பது நின்மொழி தமிழ் மொழியம்மா. கல்லைத் தெப்பமாக மாற்றியது - மாணிக்கக் கதவைத் திறக்கச் செய்தது - இறந்தவனைப் பிழைப்பித்தது - மாம்பழத்தில் கணவனுக்குப் பரமனைக் காட்டியது - எல்லாம் உன் மொழியால் தானம்மா.

ஆண்டுகள் தேய்ந்து அகிலம் அழிந்தாலும் நீ கட்டுக் குலையாது என்றும் கன்னி போல் காத்துத் தரக்கூடியது நின் இலக்கணத்திற்கு உண்டம்மா - அதோ பார் தொல்காப்பியம்-தொன்மையான நூல் நின் கண்ணீரைக் காணச் சகியாது குனிந்த தலையோடு காட்சி அளிக்கிறது. இதோ இலக்கியத்திற்குக் குறளும் - மணிமேகலையும் - சிலம்பும் நின் வருத்தமறியாது ஆடை அணியத்தெரியாது ஆரண்யங்களில் மனித ரினம் திரிந்துகொண்டிருந்த காலத்தில் ஆடையணிந்து அணிபல பூண்டு, இலக்கியமுடன் வாழ்ந்த நின் திறன் - நின் நாகரிகத்தைப்போல் உலகில் காண்டலரிதம்மா! நின் நாகரிகம் சிறந்தது!

வீரமில்லையென்றா விழிகளில் நீர் வடிக்கிறாய்? புரட்டிப் பார் புறநானூற்றை. சரித்திரத்தை - செப்புமே. வாய்வீரம் பேசிய வடவரை வென்று அவர் தம் தலையில் கல் சுமக்கச்செய்த வெற்றி விளக்கு நின் செங்குட்டுவனைப் பார்! அன்னியன்-சாளக்கியன், புலிகேசி நின்மைந்தர் ஆற்றலறியாது பெரும் படையுடன் போராடத் துணிந்துவிட்டனர். அதோ பார் நின் மைந்தன் பரஞ்சோதியால் வீழ்த்தப்பட்ட வீரர்கள் - அதோ கேட்கிறது வெற்றி முரசு - அதோ கேட்கிறது 'பரஞ்சோதி வாழ்க! வீரத்தின் வேந்து வாழ்க!' என்ற பேரொலி. இன்னும் ஏன் அழுகிறாய்? நின் மைந்தர் இறைநிலை அறியாதாரென்றா? ஆண்டவனுக்கு வரையறை வகுத்தவர் நின் சேய் களம்மா கந்தழி - கட்டுகளினின்று விடுபட்டவன் கடவுள் - பாரம்மா நின் மைந்தர் தீட்டிய கடவுள் நிலை - வணங்கியதைப் பாரம்மா. முருகு - அழகு - மலை - கடல் இவற்றை வணங்கினரம்மா! இன் னு ம் ஏனம்மா அழுகிறாய்! பேசம்மா! நீ அழு

தால் எனக்கு அழுகை வருதம்மா! பேசம்மா! ஐயோ பேசேன்!

தாய்:- அகிலமே இருளில் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது கவனிப்பாரற்றுக் கிடந்த என்மீது கவனம் செலுத்தி என் கண்ணீரைக் கண்ட கண்மணியே, கேள். என் கதறலைக் கேட்டபின் கூறு, நான் அழுவது அர்த்தமற்றதா, என்று.

நீ கழறினுய் நான் புறநானூற்றுக் காலத்தில் வாழ்ந்த நிலையை-இன்று பார் - பார்க்க முடியாது - இருண்டகாலம் - இன்னும் உதயமாகவில்லை - அதன் அடிச்சுவடுகூடத் தெரியவில்லை.

பாரப்பா-நன்ருகப் பார்! ஒட்டிய வயறு-உலர்ந்த நாக்கு - கருத்த கன்னங்கள்-ஒளி இழந்த முகங்கள் - மானத்தை மறைக்கக் கந்தலாடை கேள்! அங்கிருந்து வரும் கூக்குரலை - பசி பசி யென்று பாதவிக்கும் பஞ்சைகளின் பரிதாபக் கூக்குரலைக் கேள். ஐயோ! என் குழந்தைகள் கதறுகிருர்களே. கும்பி பற்றி யெரிகிறதென்று-புசிக்க உணவில்லையாம் - ஐயோ! என்ஞல் பொறுக்க முடியவில்லையே. வைபோக வாழ்விற்கு வேண்டிய அத்தனையும் இருந்தும் இங்கு என் கண்மணிகள் கைகளைத் தலையணையாகக் கொண்டு, கடைத்தெருவில் கவனிப்பாரற்றுத் தூங்குகின்றனரே. களத்தில் கண் இமைப்பவன் கோழை என்று கூறிய என் சேய்கள் இத்தகு அநீதங்களைக் கண்டு விழிகளை மூடிக்கொண்டதேன்?

மீளாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் என் மக்களின் வாழ்வு மலரவில்லை - இதற்கு உறுதுணை செய்யவல்ல நல் இலக்கியங்கள் மலரவில்லை. கல்வி என் மக்களிடையே மலரவில்லை — மலர்ந்த ஒரு சிலரோ மந்தகாச வாழ்வில் மதோன்மத்தர்களாக என் சிருர்களை வாட்டுகிருர்கள் பேதையென்று. பணம் படைத்துப் படாடோப வாழ்வு நடத்தும் சீமான்கள் என் குழந்தைகளைப் பஞ்சைகள் என்று பரிகசிக்கிருர்கள் - விரட்டுகிருர்கள். என் குழந்தைகள் ஓடுகிருர்கள் - ஓடுகிருர்கள் - ஓடிக்கொண்டே இருக்கிருர்கள். ஒருவரும் ஓடும் என் குழந்தையை நிறுத்தப் பாடுபட்டாரில்லை. ஏன் அழுகிறேன் என்று உனக்கு இன்னமும், விளங்கவில்லையா?

சேய்:-அம்மா! அறிந்தேன். நீ சிந்திய கண்ணீர் போதும். ஏ பஞ்சையே எங்குப் பட்டம் பெற்ருய்? பதக்கம் பெற்ருய்? என்று என்னைப் பயமுறுத்தலாம் பட்டதாரிகள்-வைக்கோல் கட்டாரியுடன் மோதுகிருர்கள் என்று கேலி செய்யலாம் பணத்தில் புரளும் பித்தர்கள். ‘வீணுக வம்பை விலைக்கு வாங்காதே’ என்று நண்பர்கள் கூறலாம். உனக்கு என்ன உரிமை-தகுதி இருக்கிறது? என்று ஒரு சிலர் கேட்கலாம். அவர்களுக்குக் கூறுகிறேன். நான் என் தாய்க்குச்சேயாகப் பிறந்தது-என் உடல் உயிர் - உணர்வு எல்லாம் அவளாக இருப்பன. இதைவிட வேறு தகுதி வேண்டுமா! இதை அற்ப மென்று கூறுவோர் எனக்கு அற்பமானவர்களே.

ஆதவனின் ஆணையாக, உன் ஆணையாக, என் உயிரினும் மேலான என் மொழியின் மேல் ஆணையாகக் கூறுகிறேன். அன்னையே இன்று முதல் என் எழுத்துக்கள் — என் குரல் ஓடும் அந்தக் குழந்தைகளுக்காக ஒலியெழுப்பும். அந்த ஓடும் குழந்தைகளை நிறுத்தி நிலையான வாழ்வு தர வையத்திடம் வழக்காடுவேன்- மறுக்கப்படின், எதிர்த்துப் போர் தொடுப்பேன். வெற்றியெனில் நின் பாதம் வணங்கி நின்னில் தோன்றும் அக்களி நகை கண்டு களி கொள்வேன். வீழ்ச்சி யெனில் நின் பாதத் தடியில்(வீணுக அன்று) வீரஞக வீழ்ந்து

கிடப்பேன். இதோ எடுத்துவிட்டேன் களத்தில் குதிக்கும் வீரன் கட்டாரியைக் கொண்டு செல்வது போல் அநீதியை எதிர்க்க இதோ என் பேனவை எடுத்து விட்டேன். இன்னும் ஏனம்மா அழுகிருய்! அழாதேயம்மா! நீ அழுதால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதம்மா! அழாதேயம்மா! அழாதே!

ஜி. தாமோதரன்,
(இரண்டாம் வகுப்பு)

வள்ளுவர் வாய் மொழி

தோழா!

இறைவனை வணங்கு. அது உன் மனத்திற்குச் சாந்தியை அளிக்கும். ஐம்பொறிகளை அடக்கி ஆள். இல்லையெனில் அவைகள் உன்னை அடக்கிவிடும். எப்பொழுதும் இன்பமான சொற்களையே சொல்லுதல் வேண்டும். செய்ந்நன்றியை மறவாதே. மறந்தால் அப் பாவத்தைப் போக்க எவ்வித உபாயமும் கிடையாது. உற்ற காலத்தில் உதவி செய்யும் உயரிய பண்பைக் கடைப்பிடி. பயனை எதிர்பார்த்து எக்காரியத்தையும் செய்யாதே.

அடக்கம் ஓர் அரிய பொக்கிஷம். அதை நல்வழியில் செலவு செய்தால் மகானுகக் கருதப்படுவாய். தீய வழியில் செலவு செய்தால் மடையனுகக் கருதப்படுவாய். ஒழுக்கம் உயிரைவிட மேலானது. ஆதலால், ஒழுக்கத்தைப் போற்றி வாழ். உலகத்து உயர்ந்தோரில் ஒருவனுக விளங்க ஒழுக்கத்தைக் கடைப்பிடி. ஐயத்தை அறவே ஒழி. இகழ்வாரைப் பொறுத்துக்கொள்.

பயனில்லாத சொற்களைப் பேசாதே. பேசுவதை அறிந்து, அறிந்து பேசு. சினம் கொள்ளாதே. சினத்தால் பல தீமைகள் ஏற்படலாம். நீ பல நூல்களைக் கற்றவனுக இருக்கலாம். அதனுல் பலன் அடைய வேண்டுமென்ருல், கற்ற கல்விக்கு ஏற்ப நெறியில் நிற்க வேண்டும். கல்வி ஞானம் பெற்றிருந்த போதிலும், கேள்வி ஞானமும் மிக முக்கியமான தொன்ருகும். கேட்பதிலும் குரு நீதி உண்டு. எப் பொருளை யார் மூலமாகக் கேட்டாலும் அப் பொருளின் உண்மைப் பொருளை அறிதல் அவசியம்.

எக் காலத்திலும் தன்னை உயர்ந்தவனுக மதிக்கக்கூடாது. அது உன்னை மடையனுக்கி விடும். நட்பு மிகவும் நல்லதொரு செய்கையாகும். அந் நட்பைப் பெரியோர்களிடம் வைத்துக்கொண்டால், இன்னும் சாலச் சிறந்ததாகும்.

ஒரு காரியத்தைச் செய்யும்போது இடம், காலம் முதலியவைகளைக் கவனித்துச் செய்தல் அவசியம். மேலும், அக்காரியத்தை ஆராய்ந்து செய்தல் மிக்க அவசியம். நீ புகழுடைய விரும்பினுல் வறியவர்க்கு ஈதலைக் கைக்கொள்.

இம்மாய உலகில் எப்பொருளும் நிலையானதில்லை. ஆதலால், கண் முன்காணும் நிலையற்றபொருள்களின் மீது ஆசை கொண்டு மறுமையை மறந்து நிற்றலால் மறுமையில் கிடைக்கக்கூடிய இன்பத்தை இழந்தவனுகின்ருய். இறப்பு உன்னை நெருங்குவதற்குள் நல்ல அறச் செய்கைகளைச் செய். அதுவே மறுமையின் பாதையாகும்.

மு. கமால்தீன்
(முதல் வகுப்பு)

எந்த நாளோ?

1. பாரினில் மனிதப் பண்பைப் பரப்பினோம் அந்த நாளில்;
ஆயினும் என்ன இன்று அடியற்ற மரம்போல் வீழ்ந்து,
வீரியம் குன்றிச் செத்து வீணராய் வாழு கின்றோம்.
"ஆனாலும் தமிழ் மக்கள், அஞ்சற்க" என்று கூறி,
"ஆருளார் நம்மை மீட்க, அவனியில்?" என்று சோர்ந்து
அனைத்தையும் விதியென் றெண்ணி அழிந்த நம்தமிழ ருக்குப்
"போரிட்டும், புண்க ளேற்றும், புனிதமாம் உயிரை ஈந்தும்
வாழ்விக்க வருவே" னென்று வாய்துணிந் துரைப்பார் யாரோ?

2. அடுத்தார்க்கு மணியும் பொன்னும் அளவின்றி ஈந்து ஈந்து
அனைத்தையும் இழந்த போதும் அயலவர் தம்மேல் வெம்போர்
தொடுத்திடின் வென்று வீழ்த்தித் தோள்வலிப் புகழை நாட்டி
எண்டிசை எல்லாம் தங்கள் ஏற்றத்தைப் போற்றக் காதில்
மடுத்திருந் தந்த மன்னர் மரபினில் வந்த நம்மோர்
உடம்பெலாம் வாடித் தோய்ந்தே உணர்வெலாம் அழிந்து குன்றி
உடுத்தற்கு மாடை யின்றி உண்ணநல் லுணவு மின்றி
உலகினில் நடைஇ பிணமாய் உழலுதல் ஒழிவ தென்றோ?

3. துன்பமே வந்த தென்று துக்கித்து ஒடுங்கிச் சோர்ந்து
இனியென்ன செய்வோ மென்று ஏங்கிய தலையில் கையைச்
சென்மமேன் எடுத்தே னென்று சோர்ந்திடுந் தன்மை போலத்
தலையிலே அடித்துக் கொள்ளும் 'சல்யூட்'டும் ஒழிந்து நாட்டில்,
அன்பெலாம் இணைத்துக் கூட்டி அகமொடு முகம லர்ந்து
முன்கைக ளிரண்டுந் தூக்கி முறையுடன் சேர்த்துக் கூப்பி,
"அன்பரே, வருக" வென்று ஆவலோ டெதிரே நின்று
வண்டமிழ் மக்கள் யாரும் வணங்குதல் எந்த நாளோ?

தொ. பா. இராமசாமி,
(முதல் வகுப்பு)

என் தாய்

உலகம் என்னை வெறுக்கிறது. சீர்திருத்தக்காரர்கள் வதியும் இந்தச் சமூகத்தில் இடமில்லை. எந்த மூலை திரும்பிப் பார்த்தாலும் என்னைக்கண்டு வெறுக்கும், இழிக்கும் பழிக்கும் கோரக் காட்சியைத்தான் காண்கிறேன். சிந்து பாடி வரவழைக்கும் எந்த மனித உள்ளத்தையும் கண்டதில்லை நான்! தேடுகிறேன்; தேடுகிறேன்; தேடிக்கொண்டேயிருக்கிறேன்.......நல் வாழ்வை நாட! இன்று வரை என் வாழ்வில் நான் யாரை அதிகமாக விரும்பிக் கனவு கண்டு வாழ்ந்தேனோ, எவரால் நான் இன்று உலகை வெறுத்தேனோ, அந்த உயிர் நாடியே - என் வாழ்வின் ஒளியே - என்னை இன்று வெறுக்கிறது; துரத்தி அடிக்கிறது நாயினும் கேவலமாக! பகுத்தறிவற்ற நாய்க்குத் தன் மடி மீது இடம் அளிக்கும் அவர்கள், இன்று நான் அவர்கள் காலடியில் தவழவும் தடை விதித்திருக்கிறார்கள். இச்சமூகம் நடை பிணமாகிய என்னை அழுகிய குட்டையில் எடுத்தெறிந்து இருக்கிறது. என் உடல் முழுவதும் அணு அணுவாகப் பிளக்கப்பட்டு இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் கலந்த ரத்தம் பெருக்கெடுத்து ஒழுகிக் கொண்டிருக்கிறது, பனித் துளிகளைப் போல்!

என்னை எந்த மனித நெஞ்சமும் அணுகிச் சூழ்ந்ததில்லை. ஆனால் ஈக்கள் என் உடல் பிளவுகளைத் தின்று, விருந்தாக்கிக் கொண்டிருந்தன. மொய்த்து இடர் விளைவிக்கும் அந்தச் சிறு ஈக்களைத் துரத்தவும் என் கைகளிலே உரமில்லை. ராஜாளியால் கொத்தப்பட்டுக் குற்றுயிராய், இரத்த வெள்ளத்தில், உழந்து கிடக்கும் பறவை போல் வீழ்ந்து கிடந்தேன். நான் "பசி, பசி," என்று துடித்தேன். கூக்குரலிட்டேன்; என் வயிற்றுக் குடல்கள் எழுப்பிய கோரக் கூக்குரலைக் கேட்டும் ஒரு சிறு கவளம் அளிக்க ஆளில்லை! மிகுந்த தாகத்தால், உலர்ந்த என், உதடுகள், உருக்கத்துடன்! "தண்ணீர், தண்ணீர்" என்று கதறின! ஆனால் ஒரு சிறு துளி தண்ணீர் ஊற்ற ஓர் இரக்கமுள்ளவன் இல்லை என் வாழ்வில்! நான் கதறிய கதறலினால் என் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன ஆறாக! ஆனால் அதைத் துடைக்க ஓர் உள்ளமும் துணியவில்லை. நான் பாழும் பிணியால் பரிதவித்தேன்; துடித்தேன்; ஆனால் என்னை என் நோயிலிருந்து விடுதலை பெறச் செய்யும் புண்ணியாத்மாவை நான் காணவில்லை! ஈரம், பசை பொருந்திய மனிதன் அஞ்சுகிறான் என் அருகில் வரப் பதறினான்; ஆனால் பரிதாபப் படவில்லை. இரக்கமுள்ளவன்தான். ஆனால் இருதயம் திறந்து இரங்கவில்லை. என்மீது இருள் படர்ந்த சுடுகாட்டின் கோர அமைதிதான் முற்றுகையிட்டு இருந்தது. உலகத்தின் 'கடவுளின் உற்பத்தி' அனைத்தும் எனக்குச் சாவுமணி அடித்தது. குற்றுயிராய்க் குமுறும் என்னைச் சொறி நாயும் வந்து மோந்து பார்த்து விட்டு ஓடிக்கொண்டிருந்தது!

நான் அழுதேன், எந்த மனித ஜன்மமும் முன்வந்து காயத்தைக்கழுவி, மருந்து போடவில்லை! ஆனால் பறவை யினங்கள் வந்து என் மீது உட்கார்ந்து கொத்திக் கொத்திக் காயத்தைப் பள்ளமாக்கின! என் உடைந்த உள்ளம் தான்! என் கோர நிலையைக் கண்டு

இரத்தக் கண்ணீர் வடித்தது. வீதியிலே, மழலைமொழி பேசிச் சிற்றில் கட்டி விளையாடும் பச்சிளம் பசலைகள் என் முகத்தைக் கண்டு பயந்தன; நடு நடுங்கின! இயற்கையின் வளப்பமாகிய குளிர்ந்து வீசும் காற்றலைகளும் என் காய்ந்த கன்னங்களில் அறைந்து கொண்டிருந்தன. வேகமாக எழும்பும் தூசி, என் புண்களில் படிந்து அரித்துக்கொண்டிருந்தது!

பசிப் பிணியால் திறக்கப்பட்டுக் கிடந்தது என் வாய்! உயிரற்ற பிணத்தின் வாயில் புகுந்து வெளி வரும் ஈக்களைப் போல், ஈக்கள் என் வாயில் புகுந்து வந்து கொண்டிருந்தன! கோரக் காட்சிதான் அது; என்னை நானே என் மனக் கண்களால்கூடக் காணத் துணியவில்லை! என்னை அவனியிலே, ஆதரவளித்து, அக மகிழ்விப்பவர் யாருமே இல்லை! ஆனால் "நீ ...... உன் அன்பு அணைப்பிலே,என்னைக் கட்டித் தழுவி முத்தமிட்டாய்! என் காய்ந்த கண்கள் கசியும் இரத்தக் கண்ணீரை மணிகளென உன் புடவைத் தலைப்பில் பெற்றுக் கொண்டாய்! என்னை உலகம்: "நீ ஒரு குஷ்டரோகி! ...... என்று பெயரளித்து அழைத்தது. பழித்தது. ......பரிதாபப் படுத்தியது. அப்பெயரைக் கேட்டேன் என் உடம்பு பற்றி எரிய ஆரம்பித்தது. அதனை நீ உன் அன்பு எனும் மாரி பொழிந்து அணைத்துவிட்டாய்! நீல வானத்தின்கீழ் எனக்கு எங்குமே இருப்பிடமில்லை! உறைவிடமில்லை. மிளிரும் நட்சத்திரங்கள் என்னைக் கண்டு விழுந்து விழுந்து நகைத்தன! கருமுகில் கூட்டங்கள் என் "அழிவை"க் கண்டு; களிப்பு மிக முரசொலித்தன! மனிதன் தான் என்னை மடிய வைக்கிறன் என்றால், விலங்குகளும் என்னை அணுக அஞ்சின! ஆனால் தாழ்ந்த என்னை, உன் உயர்ந்த உள்ளம்" அணைக்கக் காத்துக் கிடந்தது. உலகம் மதிக்கும் அந்த "ஆண்டவனே" எனக்கு வறுமையையும், பிணியையும் தவிர வேறு ஒன்றையுங் கொடுக்கவில்லை! ஆனால் "நீ எனக்கு எதைத்தான் கொடுக்கவில்லை! நீ உன் உயிரையும் அர்ப்பணஞ் செய்யத் துணிந்து இருக்கிறாய். தியாக உள்ளத்தை உலகில் உலவச்செய்தவள் நீ! உலகத்தின் ஒவ்வொரு பொருளுக்கும் முதல் சொல் நீதான்!" என்னைப் பத்து மாதம் சுமந்து—ஈன்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி, தித்திக்கும் தேனே; கனி ரசமே எனச் செப்பி, முத்து மாரிபொழிந்து, தங்கம் உருக்கித் தகடிட்டுப் பண்மகள் எங்கும் மணி அமைத்து, இயற்றியதோர் சிறு தொட்டிலிலே —' கண்ணே; என் கனியே; கண்மணியே; கண் உறங்காயோ ' ஆராரோ; பாடியவள் நீதான்!

* * *

மாசு படா வைத்துக்கொண்டு; பகட்டாகக் காட்சி யளிக்கும் தாழ்ந்த உள்ளம் படைத்த நானிலமே! ஏன் நகைக்கிறாய்? மாநிலத்தாரால் மறைக்கப்பட்ட ஓர் உயிர் செப்புகிறதே என எண்ணி நகையாடுகிறாயா? ......! நான் சொல்வது கல்லைப் பொன்னாக்கும் விந்தையல்ல!

உன் இருள் சூழ்ந்த, பாசி படர்ந்த திரையைக் கிழித்து, உன் விழிகளை நன்றாக அகல விரித்துப் பார். உன் ஊனக் கண்களைத் திறந்து பார். ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் மரக்கிளைகளிலே, சிறுமழலை பேசி இன்பாகக் குதித்து விளையாடும் அந்தப் பட்சிபாலகரின் இன்பக் குரலிலே எழும்பும் இன்பத் தொனியைப் பார்! வீட்டுக்குப் பின்னால் கொட்டிலிலே, கட்டப்பட்டுத் தாய் வரவைநோக்கித், தூய நிறம் அமைந்த, தூய்மை உள்ளம் படைத்த கருணையே உருவான அந்தக் கன்றுக்குட்டியின் குரலிலே எழும்பும் இன்பகீதத்தின் பொருளைப் பார்; பசலைகளின் இரைக்காகப் பறந்து சென்று, பருந்துக்குப் பயந்து, இரை பெற்று, ஆவலுடன் எடுத்து வந்து, தான் உண்ணாது தன்

குஞ்சுகளை உண்பிக்கச் செய்யும் அந்தத் தாய்ப் பட்சியின் குரலிலே, எண்ணத்திலே, தவழும் உணர்ச்சியின் உணர்வைப் பார்! மலர்ந்து புன்னகை வீசும் மலரின் வளர்ச்சிக்காகத் தன் சக்தியைக் குறைத்துக்கொண்டு ஆகாரம் அளிக்கும் அந்தக் கிளைகளின் தியாகத்தன்மையை நன்றாக உற்றுப் பார்! இன்னுமடா புரியவில்லை?" உன் பாழும் நெஞ்சத்திற்கு. அவள் தான் "உன் தாய்'! அத்தொனிப் பொருள் தான் உன் தாய். அந்த இன்ப உணர்வுதான் உன் தாயின் இன்ப உணர்வு! அந்த கீதம்தான் உன் தாயின் இன்பக் குரல்!

அம்மா! என் வாழ்வின் ஒளியே! என் இருள் படர்ந்த இருண்ட வாழ்வில் ஒளி தவழச் செய்ய நினைத்தவள் நீதான்! அழியாத "அன்புச் சுரங்கம்" அம்மா நீ! என் தொட்டில் பருவம் முதல் நான் மரணப் படுக்கையில் அவதியுறும் நிலை வரை, என்னைப் போற்றிப் பொன்னாக மதித்துத் துணையாக இருந்தவள் நீதானம்மா! அம்மா! என்னைப் பெற்ற தாயே! நீ சுயநல மின்றி, உன் இரத்தத்தையே எனக்கு இன்பப் பாலாக அளித்தாய்! உன் இரத்தம் குறைந்தது-உடல் தளர்ச்சி உற்றது-நரம்புகளுக்கு நடக்கவும் சக்தி இல்லை! ஆனால் நீ அதனைப் பற்றிக் கவலைப் படாது, "அம்மா! அம்மா"! என்ற கூக்குரலை எழுப்பிய என் தாழ்ந்த குரலைக் கேட்டவுடன் பதறிக் கொண்டு, ஊர்ந்து வந்தாய். உன் உடல் சக்தியற்றது, எலும்புக் கூடாகியது. உன் உள்ளம் பிணியால் துடித்துக் கொண்டிருக்கும் பொழுதும் என்னை அணைக்க ஆவலுடன் இருந்தாய். எனக்காக நீ, கணக்கற்ற இரவுகளைப் பகலாக்கி இருக்கிறாய். அம்மா! என் உள்ள உயிரோவியமே! அன்பின் பிறப்பிடமே! கருணையின் உறைவிடமே! நீ தான் தாயே! பாசத்தின் மலை. நீ தான் ஒழுக்கத்தின் உயர் சிகரம். தெய்வத்தின் இருப்பிடம்! இயற்கையின் இருப்பிடம்! மானிலத்தின் மணி விளக்கு. உண்மை உலக வழி காட்டி. புயல் சூழ்ந்த வாழ்வின் கலங்கரை விளக்கம். பரந்த உலகிலே, பரிதவிக்கும் எனக்கு ஒரே துணையாகிய, நீ என்னை விட்டுப் பிரிந்தாய். என் வாழ்க்கை இருண்டது. இனி எனக்கு வாழ்க்கை ஏது? நானும் உன்னைப் பின்பற்றுகிறேன்........! அம்மா!

நான் உன்னை என்றுமே மறக்கமாட்டேன் அம்மா! உன் விண்ணை யொத்த அன்பிடையே தவழுகிறேன்—! அம்மா! உன்னிடம் வருகிறேன் தாயே! உலக மாதாவே உன்னை அடைகிறேன். அம்மா! உன்னை "அம்மா; அம்மா" எனக் கடைசி முறையாக ஆசை தீர அழைத்துக்கொண்டே!

எம். எ. ஆர். ஷேரீப்
(இரண்டாம் வகுப்பு)

எங்கும் இட நெருக்கடியா?

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரிபூர்ணமாக நிறைந்து விட்டது. இந்த இட நெருக்கடி! 'பஸ்' ஸிலே, மின்சார வண்டிகளிலே, நின்று கொண்டு கூடப் போகமுடியாதபடி வியாபித்து நிற்கிறது இந்த இட நெருக்கடி! பள்ளிக்கூடங்களில் இடமில்லை; கல்லூரிகளில் இடமேயில்லை; சாப்பாடு விடுதிகளில் இடமில்லை; புகை வண்டிகளில் இடமேயில்லை; வர வரச் சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரையின் அகண்ட மணற் பரப்பிலே கூடும் கூட்டத்தில் கால் வைக்க இடமில்லை; தெருவிலே 'கார்' நிற்க இடமில்லை !!

'வாடகை எவ்வளவு கொடுத்தாலும் இடமல்லவா கிடைக்கவில்லை' என்று குடித்தனக்காரர்கள் புலம்புகிறார்கள். பேசும் படக் கொட்டகைகளிலே இடத்திற்காக எத்தனை ஜனங்கள் தவங்கிடக்கிறார்கள்! 'பங்கீட்டுமுறை வந்தபிறகு என் வயிற்றில் கூட இட நெருக்கடி ஏற்பட்டு விட்டது போலிருக்கிறது! எதைச் சாப்பிட்டாலும் வயிற்றை வலிக்கிறது!' என்கிறார் எங்கள் தாத்தா.

பழைய காலத்துப் புலவர் ஒருவருக்கு ஒரு சமயம் ஒரு ராஜ சபையில் இந்த இட நெருக்கடி ஏற்பட்டதாம். அங்கிருந்த மற்றப் பிரபுக்களின் மனத்திலே கர்வம் குடிகொண்டு கருணைக்கு இடமில்லாது செய்து விட்டதாம்! ஒருவரும் இந்தப் புலவருக்கு இடமளிக்கவில்லை. பார்த்தார் புலவர்; அறிவுக்கு இடமான கலைமகளை நினைத்துக் கொண்டு பாடினார் ஒரு பாட்டு!

"வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணி
பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—
வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு எம்மைச்
சரியாசனம் வைத்த தாய்'.

உடனே அரசனின் சிம்மாசனம் நீண்டு இட நெருக்கடியைத் தீர்த்துப் புலவருக்குப் புகழ் கொடுத்ததாம்!

கருப்பு சந்தைகளுக்கு இந்த 'இடநெருக்கடி' ஏற்பட்டு அவை கண் காணாத இடத்திற்கு ஓடிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். உலக வல்லரசுகளின் மனத்திலே அறிவு, ஆக்கம், சமாதானம் இவை இடம் பெற்று, அணுகுண்டிற்கும், வாயு குண்டிற்கும், அழிக்கும் தொழிலுக்கும் 'இடமில்லை' என்று சொல்லி விட்டால் எவ்வளவு நல்லது.!

இப்படி எழுதிக்கொண்டே போனால் 'இடநெருக்கடிதான்!' நிறுத்துவதே நல்லது.

ஜி. ராமச்சந்திரன்
(இரண்டாம் வகுப்பு)

எழில்

எழில் என்ற மாத்திரையின்கண் நமக்கு இயற்கை யன்னையின் தோற்றம் பிம்பமாக உண்டாகிற தல்லவா? ஆம், இயற்கை யன்னைதானே எழில் வடிவமாக உருக் கொண்டு காண்போருக்கு அவரவர்களின் மனததிற்குப் பொருந்திய வடிவமாகத் திகழ்கிறாள். அந் நங்கையை அழிக்க யாரே வல்லார்? இவ்வுலகின்கண் அவள் தான் உலக மாயிற்றே. அந் நங்கையின் சகோதரி தான் அழிபவளாகிய கைபுனைந் தியற்றும் செயற்கை யன்னாள்.

'அழகு, அழகு' என்றே உலகு அழகில் தோய்ந்துள்ளது. தொன்று தொட்டு இன்றுவரை அழகானது ஆக்கத்திற்கு ஆதரவாகவும், படைப்புக்குப் பக்கத்துணை யாகவும், அழிவிற்கு அணையதாகவும் இருந்து வந்துள்ளது. அவ் வழகைப் பற்றிப் போற்றாத இடமிருக்கோ, இப்பூமியில்? மற்று எண்ணாத இடமும் உண்டோ இப்பாரின் கண்? அல்லது பேசாத இடந் தான் உள்ளதோ இஞ் ஞாலத்தில்? அழகு என்னென்று உலகை கேட்டால் அது எவ் வகையில் பதிலளிக்கும்? என்னே அழகின் நுட்பம்!

விடியற் காலையில் அடிவானத்திலிருந்து எழும் வெய்யோனின் தோற்றத்தைத் தான் எழுத்தால் எழுத முடியுமோ? அல்லது சித்திரத்தினால் தான் சித்தரிக்க இயலுமோ? அவன் அடிவானத்தில் தோன்றுகையின் முன் "யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே", என்ற பண்டை மொழிக்கு ஒப்ப நீல வானில் சில இயற்கைத் தோற்றங்கள் எழும். சில விநாடிகளுக்குள் நீல மணிகள் விரித்துக் காணப்பட்டாற் போன்ற நீலக் கடலில் செம்பஞ்சுக் குழம்பை ஊற்றியதுபோன்று தம் செந் நிறக் கதிர்களை வீசிச் செந் நிறத்தைப் பரவச் செய்து, பின்பு அடிவானத்தைக் கிழித்துக் கொண்டு மேல் கிளம்புவான். பின்பு கடலின் மேற்பரப்பில் வெள்ளியை உருக்கி வார்த்தாற் போல் வெய்யோனின் வெங் கதிர்கள் தக தக வென்று ஒளிரும். இவ் வழகு சில நிமிடங்களில் பறந்து சென்றுவிடும். பின்பு சூரியன் வானத்தின் முகட்டைப் பிடிக்கச் செல்வான்; விளக்குகளின் ஒளி மங்க எங்கும் வெளிச்சம் பரந்து நிற்கும்.

ஒன்றோடொன்று பிணைந்தும், முட்டியும், முடுகியும், சாய்ந்தும், நெருங்கியும் உள்ள வானளாவிய அடர்ந்த மீங்களுள்ள காடுகள் ஞாயிறின் ஒளி தம்முள் புகாதவாறு தடுத்துக் காரிருள் நிழல் தருவதைச் செந்நாப் புலவர்கள் தாம் பாட முடியுமா? அல்லது பண்டு பாணர்கள் தந்தம் யாழில் பண் அமைத்து வாசிக்க முடியுமா? மந்தாரத் தென்றல் சுருதி மீட்ட, சிறகடித்துப் பறந்தோடும் புள்ளினங்கள் இசை பாட கடுவன் தம்பட்டமடிக்க, மயில் நடனம் புரியும் காட்சியை ஆயிரம் நா படைத்த ஆதிசேடனாலும் புகழ்ந்துரைக்க முடியாதே!

செம்பொன்னை யுருக்கி வார்த்தாலெனக் காட்சியளிக்கும் அந்தி வானத்தின் அழகை எப்படிக் கழறுவது? கை நீட்டி வாவென்று அழைக்கும் தரங்கத்தின் எழிலை எங்ஙனம் செப்புவது? அறலையும் பாலையும் அரித் தரித்துப் பளிங்குருகிப் பாயுமாபோல் இழி தரும் அருவிகளின் முடிவும் பாட்டெனப் பரந்து செல்லும் ஆறுகளின் ஒழுக்கும் கவினையை எவ்வாறு கூறுவது? பசுங் கடலில் நினை ஊட்டும் வயல்களின் செழுமையை எவ்விதத்தில் நவில்வது? நீல வானில் தென்படும் நட்சத்திரங்களும் அவற்றை மறைத்துச் செல்லும் கார்முகில்

களும் அவை பொழியும் மழையின் ஒழுகு தலை என்னென்றுரைப்பது? பகலவனின் வெயில் ஒளியில் பட்டு மின்னிக்கொண்டு வான் முகட்டை முட்டி நிற்கும் மலையுச்சி களின் எழிலை எம்முறையில் கூறுவது? தண்மதி தன் பால் போன்ற வெள்ளிய நிலவை வெண்முத்துக்கள் படர்ந்தாலென மிளிரும் வெள்ளிய மணலில் சொரியும் போது தோன்றும் அழகைததான் கூற முடியுமா? என்னே அழகின் திறம்? மேலும் கீழும், சுற்றும் முற்றும் சூழ்ந் தல்லவா உள்ளது எழிலானது! இவை யெல்லாம் ஒன்று சேர்ந்ததல்லவா பெண் அழகு? பெண் அழகில் ஈடுபட்டதனல் அல்லவா ஷாஜஹான் தன் மனைவி மும் தாஜ்மஹாலின் பிரி வாற்ருது தாஜ்மஹால் என்ற அழகிய கட்டிடத்தைக் கட்டி உலகின் அற்புதப் பொருள்களில் ஒன் றென்று கூறும்படி செய்து புகழ் எய்தி ஞன். இலங்கை மன்னன் பெண் அழகில் மயங்கியல்லவோ அழிந்தான்! ஆவது பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே.

அந்தோ இக்கால நவநாகரிக நாரி மணி களின் ஜோடிப்பின் கூந்தல் அழகையல் லவோ நினைக்க வேண்டும். தற்பொழுது தம் கூந்தலை விரித்து, பின்னல் போடாமல் செல்லும் நாரியைப் பார்த்தால் கற்புக் கட வுள் கண்ணகியானவள் தம் கணவனை அநி யாயமாகக் கொன்ற பாண்டியனைப் பழி வாங்க வீதி வழியின்கண் செல்லுவதைப் போலல்லவா உள்ளது. இயற்கையாக வளரும் கூந்தலில் அழகைக் காணுத பெண்டிர்கள் தம் கூந்தலை ஒரு முழ நீளம் இருக்கும்படி வெட்டி விட்டு வீதியின் வழியே ஒய்யாரமாகச் செல்லும் பொழுது அடர்ந்த கூந்தல் மயிர்கள் மயிற் தோகை போல் விரிந்து தரையில் படும்படி எண் ணெய் நீவி வளர்த்துச் சென்ற மாதர்கள் பிறந்த நம் பாரத மக்களா இவர்கள் என்று ஐயம் ஏற்படுகிறது. தம் கூந்தலின் மேல் வலை போட்டுச் செல்லும் பெண்மணிகளைக் காணும்போது இவர்கள் எம் மீனைப் பிடிக் கப் போடுகிருர்கள் என்று தோன்றுகிறது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற ஆன்ருேர்களின் மொழிக் கொப்ப இக் காலத்திய இயற்கையழகில் அதிகமாக நாட்டங்கொள்ளாத மாதர்கள் பண்டைய அழகு பொருந்திய கூந்தல் ஜோடிப்பைக் கழித்துப் புதியதாகிய அவலக்ஷண கூந்தல் ஜோடிப்புக்களை புகுத்துகிருர்கள் போலும்.

"அழகு தமிழ் சொல் வருமை", என்று சான்ருேர் கூறுகிருர்களே. அதெப்படி? மொழிக்குக்கூட அழகுண்டு என்று நீங்கள் கேட்கலாம். ஆம்! மொழிக்கு அழகுண்டு. நந்தமிழ் மகன் எழில் மிக்கவன். அவன் பலவகையான நகைகளை அணிந்துகொண்டு, பிறரைத் திகைக்கச் செய்து தம்மைப் போற்றுமாறு கூறுகிருன். அவள் தலைக்குச் சூளாமணியும், மார்புக்குச் சிந்தாமணியும், காதுக்குக் குண்டலகேசியும், கைக்கு வளை யாபதியும், இடைக்கு மணி மேகலையும், காலுக்குச் சிலப்பதிகாரமும் மற்றும் பல வகைகளை அணிந்து எழில் மிக விளங்கு கிருள். இஞ்ஞாலத்தில் எழிலை விரும்பாதவர் யார்தான் உளர்? மழையையும் மதியாமல், கானலையும் கருதாமல், பனியையும் பாரா மல், புயலையும் போகவிட்டு, அல்லும் பகலும் உழைத்து உழைத்துப் பட்டினியால் பீடிக் கப்பட்டு எலும்புக் கூடாகத் திகழும் பாட் டாளி மக்களை எழிலைக்கண்டு இன்புறுகிருர் களென்ருல் மற்றவர்களின் இன்பத்திற்கு எல்லையுண்டோ? இதனாலன்ருே திருஞான சம்பந்த மூர்த்திகள் போன்ற மெய்யடிகள் இறைவனுக்குப் பாமாலையைச் சூட்டும் போது இயற்கையன்னையையும் கூட நன்கு வருணித்துள்ளனர்.

P. செல்வநடராசன்
(II-வகுப்பு)